தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை 10-5-58 சனிக்கிழமை | இதழ் 43

வஞ்சிக்கோட்டை வாலிபன்

முதலில் மாணிக்கம் மட்டும் படம் பார்த்து விட்டு வந்து 'ஆனந்த விகடன்' ஆபீஸில் முனுசாமியிடம் படத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசினான். அப்போது முனுசாமி படம் பார்க்கவில்லை. இப்போது அவனும் படம் பார்த்துவிட்டு, இங்கே விமர்சனம் செய்கிறான்.

முனுசாமி – மாணிக்கம்

மாணிக்கம் : என்னண்ணே, என்ன ஒரே களேப்பா வர்ரே ?

முனுசாமி : ஒண்ணுமில்லை தம்பி; நேத்து 'ஆனந்த விகடன் ஆபீசில வச்சு 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' பிரமாதமாஇருக்குனு சொன்னியே, அதுக்காக அதைப் பார்த்துட்டு வரலாமுண்ணு போனேன்.

மாணி : படம் எப்புடி, ரொம்ப ஜோரா இருக்குல்ல ?

முனு : ஓ ! ஜெமினிகதையிலா... காவில குடு குடுப்பைக்காரங்க ரொம்ப ஜாஸ்தி போலிருக்கு; அதுதான் பல துணியை எடுத்து ஒரு சட்டை தச்சிருக்காங்க !

மாணி : ஏன் அண்ணே அப்படிச் சொல்றே ?

முனு : இல்ல தம்பி, இதுல மங்கம்மா ரெண்டு எடத்தில் வர்ரா; சந்திரலேகா நாலு எடத்தில வர்ரா; அவ்வையார் வந்து மாடியில நிண்ணு எட்டிப்பாத்துட்டுப் போயிடரா ! புருஷன் பணத்தையே பெண்டாட்டி திருடுன மாதிரி, ஜெமினி படத்தையே ஜெமினி காப்பி யடிச்சிருக்கு.

மாணி : அது ஒண்ணும் இல்லண்ணே ! பத்திரிகையில தொடர் கதைக்கு முன் கதைச் சுருக்கம் குடுக்கிருங்கள்ல அது மாதிரி இதுக்கு முன்னலெ வந்த படங்களுக்கு ஒரு சுருக்கம் குடுத்திருக்காங்க ! மொத்தத்தில படம் என்ன வரப்போவுது என்ன வரப் போவுதுண்ணு இருக்குல்ல ?

முனு . ஓ ! படம் ஆரம்பிச்ச கொஞ்ச நேரத்திலேயே எப்ப வரப்போவுது எப்ப வரப்போவுதுண்ணு இருக்கு !

மாணி:—டான்ஸ் தானே ?

முனு : இல்லை, இண்டர்வெல் !

மாணி . இண்டர்வெல்லுக்கு அப்புறம் சொல்லண்ணே !

முனு : அப்புறமும் வராதா வராதாண்ணு இருக்கு !

மாணி : என்னண்ணே அது ?

முனு : வணக்கம் !

மாணி . அண்ணே நீ பொறுமையாலெ இப்புடித் தாக்கிறே !

முனு : படத்திலயே பொறுமையாலெதான் வீரப்பா தாக்குறுரு ! நான் உண்மையைச் சொல்றேன் தம்பி, படம் ஒரே மலையாள அவியல் !

மாணி : நடிப்பெல்லாம் எப்படி அண்ணே ?

முனு : நடிப்பா ? யார் நடிக்கிரு ? படத்திலயே டி. கே. சண்முகம் தான் நடிக்க முயற்சி பண்ணுரு !

மாணி : பத்மினி ?

முனு : பாவம்; ரொம்பக் கஷ்டப்பட்டு அதைக் கெடுத்திருக்காங்க !

மாணி : வைஜயந்தி ?

முனு : எங்க அம்மாவும் ஒரு காலத்தில் என்னைப்போலத்தான் இருந்தாண்ணு அடிக்கடி காட்டிக்கிது! அதைத்திவுராணிண்ணு சொல்ருங்க; அது ஜெமினிகணேசனை 'ஏய், ஏய்'னு கூப்பிடறதைப் பார்த்தா ரொம்ப காலமா குதிரை ஓட்ற தொழில்ல இருந்திருக்கும்னு தோணுது.

மாணி : எழுதிக் குடுத்ததைத் தானேண்ணே பேசுது ! வசனம் நம்ம கொத்தமங்கலம் சுப்பு தானே !

முனு : ஆமா தம்பி, இதுல வசனத்தைக் கேக்கிறப்போ தமிழ் ஆட்சி மொழி ஆவுறது அவ்வளவு நல்லதில்லைண்ணு தோணுது ! அதுலேயும், வைஜயந்தி இருக்க தீவுல எல்லாரும் கோரமாஇருக்காங்க. இதுமட்டும் அழகா ஜொலிக்குது !

மாணி : சரிதான் வெளிநாட்டுக்காரங்க அடிக்கடி வர்ர தீவுபோலிருக்கு. ஆமா...படத்தை விடு. நீ ஏன் இன்னும் சவரம் பண்ணிக்காம இருக்கே ?

முனு : குளிச்சுட்டுத்தான் தம்பி சவரம் பண்ணிக்கப் போறேன் !

மாணி : என்னண்ணே இது வேடிக்கையா இருக்கு ?

முனு . தீவுல, ஜெமினி கணேசனை குளிப்பாட்டுனதுக் கப்புறம்தான் சவரம் பண்ருங்க !

மாணி : கத்தி வர்ரதுக்கு கொஞ்சம் லேட்டாயிருக்கும்அண்ணே! அதை ஒரு குத்தமா எடுத்துக்கிறியே ! படத்தில கண்ணம்பா நடிச்சிருக்க நடிப்பை யார் நடிக்க முடியும் ?

முனு : ஏன் ஜெமினி கணேசன் நடிச்சிருக்காரே; கண்ணம்பா பைத்தியமா நடிச்சிருக்கு, அவர் வியாபாரியா நடிச்சிருக்காரு; ரெண்டும்ஒரேமாதிரியா இருக்கு!

மாணி : ஆமா, பம்பாய் மீனட்சி எப்படி ?

முனு: படத்தில் கொழந்தெ வாலிபனவுது; வாலிபன் கிழவனவுருன். ஆனல் பம்பாய் மீனட்சியும், ஜெமினியோட ரெட்டைக் குழந்தையும் ஒரே மாதிரியா இருக்காங்க ! ஒருவேளை சிட்டுக் குருவி லேகியம்போல 'ஜெமினி லேகியம்' ஏதாவது இருக்கும் போல்ருக்கு !

மாணி : பொம்பளைகளுக்கு எவ்வளவு வயசானலும் வயசு தெரியாதண்ணே; அதைத்தான் அப்புடிக் காட்டிருக்காங்க !

முனு : ஆன தம்பி, ஒரு எடத்துல ஜெமினிகணேசன் தோண்டுருரு பாரு; இன்னெரு எடத்தில் கண்ணம்பா தோண்டுருங்க பாரு; ரெண்டு பேரும் தோண்டுறதைப் பார்த்தா பூமிக்குள்ளயாவதுகதை இருக்காதாண்ணு தேடுறமாதிரி இருக்கு !

மாணி : அது சரி அண்ணே, ரெண்டு பேரும் தோண்டுறபோது மேலேயிருந்து தண்ணி வர்ரமாதிரி காட்டியிருக்காங்களே, அது எப்படி ?

முனு : ரொம்ப மர்மம் தம்பி ! கோட்டையோ கடலுக்கு நடுவில இருக்குது: அவங்களோ கீழ தோண்டுருங்க; தண்ணியோ மேல இருந்து வருது ! இன்னெரு அதிசயம் தம்பி; பட ஆரம்பத்தில விஜயகுமாரியைக் கூட்டிக்கிட்டு வஞ்சிக்கோட்டைக்கு வந்த ஜெமினி கணேசன், சம்பந்தமில்லாத வீட்டுலெ எல்லாம் போயி தங்கச்சியைக் கட்டிக்க கட்டிக்கண்ணு கேட்கிருரு பாரு; அப்பவே நான் நெனச்சேன் இவரு ஒரு காலத்தில வியாபாரியா வருவாருண்ணு !

மாணி : அதேமாதிரி வந்தாருல்ல; அது எவ்வளவு பெரிய அதிசயம் !

முனு : அதிசயமா ? அதிலயும் அவரு நான் "ரூபாய்" வச்சிருக்கேன்னு வசனம் பேசுறதைப் பார்த்தா, வஞ்சிக்கோட்டைங்கிறது செய்ன் ஜார்ஜ் கோட்டையாய்த் தோணுது.

மாணி : 'ரூபாய்'ங்கிற வார்த்தை வர்ரது தப்புத்தான்அண்ணேன்; ஆனலும், இந்தக் கதைக்குத்தான் காலம் கிடையாதே !

முனு : கதைக்குக் காலம்இருக்கோ இல்லையோ, வாசனுக்கு நல்ல காலம் இருக்கு !

மாணி : அது சரி, போட்டி நடனம் எப்படி, அதுதான் படத்துக்கு உசிரு !

முனு : ஆகா, நாலு பேரும்போட்டி போட்டுக்கிட்டுப் பிரமாதமா ஆடுருங்க !

மாணி : நாலு பேரா ?

முனு : ஆமா, வைஜயந்தியும், பத்மினியும் ஒரு பக்கம் ஆடுருங்க; வீரப்பா இன்னெரு பக்கம் ஆடுருரு; ஜெயிலுக்குப் போன ஜெமினிகணேசன் திரும்பி வந்து இன்னெரு பக்கம் ஆடருரு !

மாணி : நல்ல வேளை; நீயாவது ஆடாம வந்தியே !

முனு : ஆனலும் சாயி–சுப்புலட்சுமி நாட்டியத்தைப் பார்த்தவங்களுக்கு, இது ஒண்ணும் பிரமாதமில்லை தம்பி !

மாணி : கத்திச் சண்டை எப்படி அண்ணே ?

முனு : கத்திச் சண்டையைப் பார்க்கும்போதெல்லாம், இந்த எடத்தில எம். ஜி. யார் இருந்தா எப்படி இருக்கும்ணே தோணுது தம்பி ! கூடுமானவரைக்கும் நல்லா செஞ்சிருக்காங்க !

மாணி : பாட்டு ?

முனு : அது பாட்டுக்கு வருது, ஜனங்க பாட்டுக்கு எழுந்து போருங்க; நானும் நமக்கென்னண்ணு எம்பாட்டுக்கு உக்காந்துட்டேன் !

மாணி : பொதுவா, கண்ணுக்கு அழகா, பொண்ணுக வருதுகளா இல்லியா ?

முனு : ஐயோ, பொண்ணுங்களா ? வைஜயந்தியோட கால் வருது; அப்புறம் மேல் வருது; பாக்கியும் வராதாண்ணு இருக்கும்போது போர்வையைக் கொண்டாந்து போர்த்திடருங்க !

மாணி : நல்ல வேளை ! ஆர்வத்தில நீ திரைக்குப் பின்னலெ போய்ப் பார்க்காம இருந்தியே ! ஆமா, 'வீரத்தாய்' நாடகம் எப்படி ?

முனு : பத்மினி நடிப்புப் பிரமாதம்! ஆன, பின்னணியில வர்ர பாட்டுத்தான் வீரத்தாயை கோரத்தாயா ஆக்கிட்டுது !

மாணி : 'செட்டு'களெல்லாம் எப்படி ?

முனு : சகிக்குது தம்பி ! என்ன இருந்தாலும் சேகர், சேகர்தான் !

மாணி : அண்ணே, பொதுவா படத்தைப்பத்தி என்னதான் நீ சொல்றே ?

முனு : ஒரு தடவை இல்ல தம்பி, பத்துத்தடவை சொல்றேன்;படம் அற்புதமான **அபூர்வ சகோதரர்கள்;** தன்னிகரில்லாத **சந்திரலேகா;** மகிழ வைக்கும் **மங்கம்மா;** இன்பமூட்டும் **இங்கிலீஸ் படங்கள்** இத்தனைக்கும். நடுவுல வஞ்சிக்கோட்டைண்ணு ஒண்ணு வருது; அதுவும் சகிக்குது !

மாணி : மொத்தத்துலெ படம் ஓடுமா ?

முனு : அச்சாவா ஓடும் ! ஏன்னு வேறு படங்களுக்கு 'கச்சா' பிலிம் கெடைக்கல பாரு !

அடுத்த இதழில்
சம்பூர்ண
ராமாயணம்
(விமர்சனம்)
வணங்காமுடி எழுதுகிருர்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 10—5—58 ‖ இதழ் 43

வீணுகும் வியர்வைத்துளிகள் !

1955-ல் மண் தோண்டும் இயந்திரங்கள் சிலவற்றை வாங்குவதற்கு, அந்த நிறுவனம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கியதாம். அதன்பேரில், 5 மாதங்களுக்குள் இயந்திரங்கள் வந்துசேர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு, இறக்குமதிக்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருந்தாராம், திட்ட அதிகாரி !

1956 ஏப்ரல் மாதத்தில், அனுமதி கோரப்பட்டது; ஆனுல், அனுமதி தரப்பட்டது 8 மாதங்களுக்குப் பிறகுதான் !

1957 சனவரிக்குள் - மழைக்காலம் முடிவதற்குள் - இயந்திரங்கள் தேவைப்பட்டதால், அந்த நிறுவனம், விமானக் கட்டணமாக ரூ. 16,611 கொடுத்து இறக்குமதி செய்திருக்கிறது.

"இயந்திரங்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டவுடன், இறக்குமதி அனுமதி தரப்பட்டிருந்தால், கட்டணத்திற்கெனச் செலவிடப்பட்ட அதிகத் தொகையான ரூ. 16,200 தவிர்க்கப்பட்டிருக்கலாம்."

என்று, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட நிறுவனத்தின் தணிக்கைக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய மற்ருெரு செலவையும் அந்தக் குழு தனது அறிக்கையில் குறிப்பிடுகிறது.

1951-ம் ஆண்டில், திலையா நீர் மின்விசைத் திட்டத்திற்கென ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்ட இயந்திரங்கள், இங்கே வருவதற்குள் பழுதடைந்திருக்கின்றன; அவற்றை வாங்கும்போது செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பழுது பார்ப்பதற்கான செலவை இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் ஏற்க வேண்டும்.

அந்த இயந்திரங்களை விற்ற நிறுவனம், அவற்றைப் பழுது பார்த்து அனுப்புவதற்கு ஒப்புக்கொண்டது.

ஆனுல், போதுமான ஆதாரமில்லாமல், பழுதுபார்க்கப்பட்ட இயந்திரம் நல்ல முறையில் இயங்காதெனக் குறிப்பிட்டு, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட நிறுவனம் 6,620 பவுன்களுக்குப் புதிய இயந்திரங்களை வாங்கிவிட்டதாம். புது இயந்திரங்களை வாங்குவதற்கான தொகை இன்ஷ்யூரன்ஸ நிறுவனம் தர வேண்டுமெனக் கோரப்பட்டதாம். கடைசியில் இந்தத் தொகையினைப் பெருமல் பழுது பார்க்கப்பட்ட இயந்திரங்கள் துணை உறுப்புகளாகப் பயன்படுத்துவதற்காக, திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டதாம் !

மின்பெறு கம்பிகளுக்கான புதைகுழிகளுக்கு ரூ. 40,000 செலவிடப்பட்டதாம். குழிகள் தோண்டப்பட்ட சில நாட்களுக்குள்ளேயே, அவை பயன்படக்கூடியன அல்ல என்று முடிவு செய்யப்பட்டதாம். அவைகளைப் பழுதுபார்ப்பதற்கென ரூ. 14,000 செலவிடப்பட்டதாம்.

—இந்த விபரம் எல்லா இதழ்களிலும் வெளிவந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி சார்புள்ள தினசரிகள்கூட இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றன. 'இந்தியா' என்ற பொதுப்பெயரின் பெயரால் எல்லா மாநிலங்களிலிருந்தும் ஏழைகளிடம் வசூலிக்கப்படும் பணம் இதுபோன்ற ஊழல்களால் பாழாக்கப்படுகிறது என்பதை எண்ணும்போது கட்சி சார்பற்ற எல்லோர் உள்ளங்களும் எரிச்சலடைகின்றன.

காங்கிரஸ்தான் நாட்டையாளுவதற்குத் தகுதியுடைய கட்சி என்று எல்லா அமைச்சர்களும் பேசுகிருர்கள். தகுதியுடைய அந்தக் கட்சியின் ஆட்சியில்தான் கொடுமைகள் தினம் தினம் நடைபெறுகின்றன.

போலீஸ்காரர்கள் வேலை நிறுத்தம்,

ஆசிரியர்களின் சம்பள உயர்வுப் போராட்டம்,

என். ஜி. ஓ. க்கள் வேலை நிறுத்தம்.

இத்தனையும் யாருடைய ஆட்சியில் ? காங்கிரஸ் ஒன்றினுல்தான் நாட்டை ஆளமுடியும் என்று அமைச்சர்களால் பெருமையோடு கூறிக்கொள்ளப்படுகிற காங்கிரசின் ஆட்சியில் ! 'கல்யாணமாகாத காமராசருக்கு ஆயிரக்கணக்கில் சம்பளமா ? ஏழெட்டுக் குழந்தைகளைப் பெற்று அடுக்கி வைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்டால், என். ஜி. ஓ.க்கள் சம்பள உயர்வு கேட்டால் கையை விரிக்கிறீர்களே' என்று எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும் கேட்கிருர்கள். பதில் தர வகையில்லை. கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவும் திறனில்லை. ஆனுல் இதுபோன்ற பெருந்தொகைகள் ஊழல்களின் பெயரால் அழிவதை மட்டும் அவர்கள் தாங்கிக்கொள்கிருர்கள். இத்துணை விளக்கங்களைக் கூறி, இவ்வளவு காரணங்களைக் காட்டி எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளும்கட்சியின் குறைகளை எடுத்துச் சொன்னுலும், 'எதிர்க்கட்சிகள் சரியில்லை' என்ற ஒரே புலம்பலைத்தான் காங்கிரஸ் அமைச்சர்கள் வெளிப்படுத்துகிருர்கள்.

இவ்வளவு பணம் பாழாகியிருக்கிறது. இதற்கென்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது சர்க்கார் ? பொறுப்பாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை விதிக்கப் பெறுவார்களா ? பொதுமக்கள் பணம் பாதுகாக்கப்படுமா ? ஏழைகளின் வியர்வைத்துளிகள் கௌரவிக்கப்படுமா ?

அல்லது, நாட்டைத்தான் கவனிக்க முடியவில்லை; நிர்வாகத்தையும் மேற்பாக்க வகையில்லை என்ற 'பிரகஸ்பதி' பட்டத்தைப் பெறத் தயாராக இருக்கிறதா காங்கிரஸ் சர்க்கார் ?

இந்த ஊழலுக்கு யார் காரணம் ? விடை கிடைக்குமா ?

சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையே இவ்வளவு என்ருல், சர்க்காராலேயே மறைக்கப்பட்டது, சர்க்காருக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டது எவ்வளவு ?

சர்க்கார் இதைக் கவனிக்கவில்லையானுல் நல்லவர்களின் இதயங்களும் இடிந்து, தீயசக்திகளை உருவாக்க ஏதுவாகும் என்பதை அரசியலாருக்கு எச்சரிக்க விரும்புகிறேம்.

கன்னடப் பத்திரிகையாளர்களுக்குக் கொள்கை விளக்கம்

கன்னட மாவட்ட தி. மு. க. மநாடு ஏப்ரல் 26, 27 தேதிகளில் பெங்களூரில் நடைபெற்றது. 'கன்னட நாடு' இதழின் ஆசிரியர் எம். இராமன் அவர்கள் 27-ம்தேதியன்று அளித்த விருந்தொன்றில் அறிஞர் அண்ணு, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் மற்றும் கழக முன்னணி வீரர்களும், கன்னடப் பத்திரிகையாளர் பலரும் கலந்துகொண்டனர். விருந்துக்குப் பிறகு பொதுச் செயலாளர் அவர்களை கன்னடப் பத்திரிகையாளர்கள் சந்தித்தார்கள். பொதுச் செயலாளர் அவர்களுடன்,

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், வழக்கறிஞர் வி. பி. ராமன், காஞ்சி. கல்யாணசுந்தரம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. எஸ். எஸ். தென்னரசு, ஆர். எஸ். பாண்டியன், க. அறிவழகன் ஆகியோரும் இருந்தனர்.

பத்திரிகையாளர் பலரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றியும், அதன் சுதந்திர இலட்சியம்பற்றியும் கேட்டறிந்துகொண்டனர்.

இந்தி எதிர்ப்பு, பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினைகள்பற்றியும் எழுந்த கேள்விகளுக்கு, உடனிருந்த தோழர் வி. பி. இராமன் அவர்கள் விளக்கமாகப் பதில் தந்தார்கள்.

'ஜெய் நாடு' என்ற இதழின் சார்பில் திரு. ஸ்ரீகிருபா, சத்யா ஆகியோரும், திருவாளர்கள் எம். இராமமூர்த்தி (வீரகேசரி), ராசு (சல சித்ரா), சோமசேகர் (அலங்கூர்), எஸ். என். குப்தா (கர்நாடகா அட்வர்டைசிங்), பி. ஏ. இராவ், குமார வெங்கண்ணு, நாகராஜ் (தினத் தந்தி), மற்றும் நகர சபை உறுப்பினர்களான பி. என். நாராயணன், தொப்பாளன், வெங்கடேஷ் ஆகியோரும், நகரிலுள்ள சென்னைப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

பேட்டிக்குப் பிறகு, பொதுச் செயலாளர் அவர்களையும், இதர முன்னணி வீரர்களையும் பத்திரிகையாளர்கள் அறிமுகம் செய்துகொண்டு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

குஞ்சரத்தின் கதை

தென்னரசு

12

கதிரவன் கருகிச் சாய்ந்தான். அழகர்மலையின் விளிம்பில் மட்டும் சூரியனின் ஒளிக்கற்றை வெடித்துக் கிளம்புவதுபோல் தெரிந்தது. நேரம் செல்லச் செல்ல அந்தக் கற்றையும் அழிந்தது. அந்திநிலா, கைம்பெண்ணைப்போல் ஒளிஇழந்து மேகத் திரளுக்குள் ஓடிவந்துகொண்டிருந்தது. கண்ணம்மாவின் தந்தை முற்றத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்போது வெளிக்கதவு தட்டும் ஓசை கேட்டது. பெரியவர் பயந்தார். தன்னுடைய மெலிவுக்குக் காரணம் என்ன, கண்ணம்மா எங்கே-என்று அவளுடைய தோழிகள் கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவர் நடுங்கினார்.

கதவு பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது. மனதுக்கு விருப்பமில்லாமலே கதவைத் திறந்தார் பெரியவர். மெழுகுசீலை போர்த்திய அருமையான வில்வண்டி ஒன்று வாசலில் நின்றது. வண்டிக்காரன் பெரியவரோடு பேசினான்:

"இளையாத்தக்குடி ஜமீன்தார் பொன்னழகர் வந்திருக்கிறாரு. வண்டியிலே இருக்கிறாரு" என்றான் அந்த வண்டிக்காரன்.

பெரியவர், மேலே போர்த்தியிருந்த சாயத்துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டு வண்டிக்குப் பக்கத்தில் வந்து அவருக்கு மரியாதை செலுத்தினார்.

"என்னப்பா அய்யாக்கண்ணு, என்ன தாடியுமீசையுமா இருக்கிறாய்?"-பொன்னழகா கேட்டார்.

"உடம்புக்குச் சரியில்லே 'தொழிலும் மந்தம்! தேர் திருவிழா நடந்தா மேளத்துக்குப் போகலாம்! எல்லாம் ஓய்ந்து போச்சே!"

"ஒன்றுக்கும் கவலைப் படாதே நானிருக்கேன்......ஏன் அய்யாக்கண்ணு வீட்டிலே யார் யார் இருக்கிறீர்கள்?"

ஜமீன்தாரின் இந்தக் கேள்வி பெரியவர் உள்ளத்தில் சுளீர் என்று குத்தியது.

"நானும் என் மனைவியும் தான் இருக்கிறோம்.... அதோடு என் மகள் இருக்கிறது.......ஏன் இப்புடிக் கேக்கிறீங்க?"-பெரியவர் கேட்டார்.

"ஒன்றுமில்லை அய்யாக்கண்ணு, உன்னிடம் சொல்வதற்கென்ன! நீ தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நான் தரும் பொருளைக் கொஞ்ச நாளைக்கு நீ பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மறுக்காமல் இந்த உதவியை நீ எனக்குச் செய்யவேண்டும்." என்று பொன்னழகர் அய்யாக்கண்ணிடம் சொன்னார்.

அய்யாக்கண்ணு மறுமொழி கூறவில்லை. அந்தப் பகுதியில் விபரம் தெரிந்தவர்கள் அனைவராலும் மதிக்கப்படும் ஒரு ஜமீன்தார், வீடு தேடி வந்து கோரும் உதவியைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதிலே அய்யாக்கண்ணுக்கு அளவுகடந்த ஆர்வம் ஏற்பட்டது. ஜமீன்தார் தன்னை நம்புகிறாரே என்பதிலே அய்யாக்கண்ணுக்கு மட்டில்லா மகிழ்ச்சி.

"உங்களுக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்." என்று குழைவோடு சொன்னார் அய்யாக்கண்ணு. உலகத்தில், உபச்சாரமொழிகளில் உச்சக்கட்டத்தில் நிற்கும் இந்த வாக்கியத்தை அய்யாக்கண்ணு இருதயப்பூர்வமாகச் சொன்னார். ஏழைகளின் உதடுகள் விசுவாசமுள்ள உதடுகள். இருதயத்தின் கட்டளையைத்தான் அந்த உதடுகளுக்கு ஒலிக்கத் தெரியும். இருதயத்தின் அனுமதியின்றி அவைகளுக்குப் பேசத் தெரியாது. அதனால்தான் அய்யாக்கண்ணின் குரலில் தூய்மையைக் காணமுடிந்தது.

ஜமீன்தார் பொன்னழகர் மறுநாள் இரவு வருவதாக அய்யாக்கண்ணுவிடம் கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டுபோனார்.

அழகான வில்வண்டி. முன்னும் பின்னும் பட்டுத்திரை. வில் போன்ற கொம்புடைய சிற்றானைக் குட்டி போன்ற கம்பீரமான மாடுகள். ஜல் ஜல் என்று கிளம்பியது.

ஜமீன்தார் தன் வீட்டுக்கு எதிரே வண்டியை நிறுத்திப் பேசிய களிப்பில் தன்னுடைய கவலையை ஒரு கணம் மறந்துவிட்டார் அய்யாக்கண்ணு.

வீட்டுக்குள் ஓடினார். மனைவி அமிர்தம் நிலையைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தாள்,

"அமிர்தம்! அமிர்தம்!"

"என்ன ...!"

இருநூறு ஆண்டுகளுக்கு முன் தென்பாண்டி மண்டலத்தில் நிகழ்ந்த இனிய காதற் கதை இது

"இளையாத்தக்குடியாரு வந்துவிட்டுப் போகிறார்!"

"நாயனத்துக்குக் கூப்பிடுறாரா?"

"இல்லை!...இங்கே வா...ஏதோ சாமான் தருவாராம், அதை நாம் பத்திரமா வைத்துக்கொள்ளவேண்டுமாம்! அதுக்காகத்தான் வந்து போகிறார்!"

"நீங்க ஏன் ஒத்துக்கிட்டீங்க? நமக்கெதுக்கு பெரியெடத்துப் பொல்லாப்பெல்லாம்?"

"பெரிய இடத்தை எதித்தால்தான் பொல்லாப்பு; அவர்களுக்கு உதவினால் கித்தாப்புத்தானே அமிர்தம்! அதுவும் ஜமீன்தார் பத்து வருஷங்களா நமக்கு வேண்டியவர். மறுக்கலாமா அமிர்தம்?"

"என்னமோ போங்க. எல்லாம் நம்ப தலையிலே வந்து விடிஞ்சிறப் போகுது! 'பட்ட காலிலேயே படும் கெட்டகுடியே கெடும்'னு சொல்லுவாங்க."

—அமிர்தம் தளதளத்த குரலில் அய்யாக்கண்ணுவிடம் சொன்னாள். அவளது குரல், மேட்டிலிருந்து ஊர்ந்து வரும் அருவி நீர்போல் வளைந்து வளைந்து ஒலித்தது.

இவ்வளவுநேரம் நிமிர்ந்து பேசிக்கொண்டிருந்த அய்யாக்கண்ணு, அமிர்தத்தின் பேச்சுக் கேட்டபின் கொஞ்சம் தளர்ந்தார். ஆள்பலம், ஆஸ்திபலம் எல்லாம் பெற்ற ஒரு ஜமீன்தார் ஒரு பொருளைக் காப்பாற்ற முடியாமலா இருப்பார்! அப்படியானால் அது என்ன பொருள்? புதையல் கலயமோ? பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பத்திரங்களோ? ஒருவேளை கள்ளநோட்டுக்களோ? - அய்யாக்கண்ணுக்கு ஒன்றும் புரியவில்லை. புலம்பினார். புரியாமல் கொடுத்துவிட்ட வாக்குறுதியை எண்ணிக் கலங்கினார். எந்த மனைவி அமைதியாகக்கிடந்த உள்ளத்தை குழப்பினாளோ, அதே மனைவி இப்போது அருகில் வந்தாள்;

"ஏன் மனதை அலட்டிக்கிறீங்க? வருவது வந்துதானே தீரும். நம்ப நெனைக்கிறபடியா நடக்குது!" என்று ஆறுதல் கூறினார். அய்யாக்கண்ணு அடித்துவைத்த சிலைபோல் தூணில் சாய்ந்தபடி இருந்தார்.

மறுநாள் இரவு வந்தது. இருட்டு அவ்வளவாக இல்லை. ஏரிக்கரையில் ஆள் நடந்தால், வண்டிகள் வந்தால் தெரியுமளவுக்கு மங்கலான வெளிச்சம் இருந்தது. அய்யாக்கண்ணு வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஏரிக்கரைப் பக்கமாகத் திரும்பிக் கொண்டிருந்தார். அழகு நாச்சியம்மன் கோயிலின் கோபுரத்தில் குடியிருந்த புறாக்களின் சிறு குரலும் சிறகடிப்பும் அந்த அமைதியான நேரத்திற்கு பயங்கரக் குணத்தைப் புகுத்திக்கொண்டிருந்தது. பயங்கரமான சதி ஒன்றில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவராய் பீதியடைந்த உள்ளத்தோடு தலையிலே ஒரு முக்காட்டுடன் அய்யாக்கண்ணு உட்கார்ந்திருந்தார்.

கொஞ்சநேரத்திற்குப் பிறகு ஏரிக்கரைப் பக்கமாக ஒரு விளக்குத் தெரிந்தது. அது விளக்கா அல்லது கொல்லி வாய்ப்பிசாசா என்று அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அவருக்கு அதிலெல்லாம் நம்பிக்கை உண்டு. 'உன்னைப் பிடித்த சனியன் தொலைவதற்கு, நீ ஒன்பது நாளைக்கு இலவசமாக வந்து நாயனக்கச்சேரி செய்யவேண்டும்' என்று சொன்னால் கூட அதை ஒரு புண்ணியக் காரியமாக ஏற்றுக்கொள்ளும் கடைந்தெடுத்த அசல் பக்திப்பரவசம் அய்யாக்கண்ணு. கண்ணைச் சிமிட்டாமல், அகல விரித்துப் பார்த்தார். ஏரிக்கரைப் பக்கமாகத் தெரிந்த விளக்கு ஆட்டிவிட்ட தொட்டிலைப் போல் ஆடிக்கொண்டிருந்தது. அய்யாக்கண்ணுக்கு உள்ளூரக் கொஞ்சம் பயம்தான். எழுந்துபோய் அமிர்தத்தை எழுப்பிக் கொண்டு வந்தார். அமிர்தம் எதிர்த்திண்ணையில் அமர்ந்தாள். அய்யாக்கண்ணு புகையிலைச்சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டார்.

விளக்கு இப்போது ஆடவில்லை. தெருவிலே வந்துகொண்டிருந்தது. ஒருவர் விளக்கைக் கொண்டுவர; இரண்டு பேர் பின்னே வந்தார்கள். விளக்கு அருகில் வந்தவுடன் அய்யாக்கண்ணு எழுந்து நின்றார்.

"அய்யாக்கண்ணு!"

"யாரது!"

"ஆளை மட்டுப் படவில்லையா? எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாயா?"

வந்தவர் ஜமீன்தார் பொன்னழகர் என்பதைப் புரிந்துகொள்ள அய்யாக்கண்ணுக்கு அவ்வளவு நேரம் பிடித்தது.

எல்லோரும் உள்ளே போனார்கள். ஜமீன்தாரோடு ஒரு அழகிய வாலிபன் வந்திருந்தான். வண்டிக்காரன் விளக்கோடு வெளியிலேயே நின்றுவிட்டான்.

"உங்களுக்காக காபி போட்டு வைத்திருக்கிறேன். சாப்பாடுகூட இருக்கிறது. அயிரைமீன் குழம்பு. முட்டை அவிக்கச் சொல்கிறேன்." என்று அன்புடன் கேட்டார் அய்யாக்கண்ணு.

"ஒன்றும் வேண்டாம். நான் சாப்பாட்டை முடித்துக்கொண்டுதான் புறப்பட்டேன். அய்யாக்கண்ணு, கொஞ்சம் என்னோடு வெளியிலே வருகிறாயா?" என்று கேட்டார் ஜமீன்தார்.

ஜமீன்தார் முன்னேபோக, அய்யாக்கண்ணு பின்தொடர்ந்தார். ஒன்றும் புரியாத இந்த நடவடிக்கைகள் அமிர்தத்தின் உள்ளத்தை மேலும் குழப்பியது. வெந்த உள்ளத்திற்கு எரும்பு கடியும் எரிச்சலைக் கொடுக்கிறது. ஆனால் அமிர்தத்தின் உள்ளம் வெந்து அவிந்து நொந்த உள்ளம். குழம்பினாளே தவிர அஞ்சவில்லை. விளக்கை எடுத்துக்கொண்டு அவளும் வெளியிலே வந்தாள்.

வீட்டு வாசலிலே ஒரு வேப்பமரம். ஜமீன்தாரும் அய்யாக்கண்ணும் அந்த மரத்தடியில் போய் நின்றார்கள்.

"அய்யாக்கண்ணு, என்னோடு வந்திருப்பது யார் தெரியுமா? யாரும் சந்தேகப்படுவார்களே என்பதற்காக ஆண்வேடம் போட்டுக் கூட்டி வந்திருக்கிறேன். அவள் பெண்; கல்யாணமாகாதவள். அவள் தந்தையார் பெயரைச் சொன்னால் நீயே ஆச்சரியப்படுவாய். சூரைக்குடி சிங்கப்பெருமாள் அம்பலகாரர் மகள். பெயர் குஞ்சரம்." என்றார் ஜமீன்தார்.

அய்யாக்கண்ணு பெருமூச்சுவிட்டார். பெருமூச்சு விட்ட அந்த கண நேரத்திற்குள் என்னென்னவோ எண்ணி முடித்துவிட்டார் அவர்.

அய்யாக்கண்ணு ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஜமீன்தார் அவரைப் பேச விடவில்லை.

"நீ கலங்குவாய் என்று எனக்குத் தெரியும். நான் உன்னைக் கைவிட்டு

— 10ம் பக்கம் —

"தமிழன் எங்கே?"

நூல் நயம்



கா. அப்பாதுரையார்

"தமிழன் எங்கே?"–சிந்தனையைத் தூண்டிப் புத்தார்வம் தட்டி எழுப்பும் தலைப்பு இது! தலைப்புக்கு ஒரு சிறிதும் பின்னிடாத வகையில் இது ஒரு சிந்தனைக் கருவூலமாகவும் ஆர்வக் கலைப்படைப்பாகவும் இயல்கின்றது. ஆசிரியர் உயர்திரு. தென்புலோலியூர் மு. கணபதிப் பிள்ளையவர்கள் ஒரு தலைசிறந்த ஆராய்ச்சியாளர் மட்டுமல்லர்; புதிய எழுத்தாளரிடையேயும் முன்வரிசையில் இடம்பெறத் தக்கவர் என்பதை இவ்வேடு தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டுகிறது. அவரது ஆராய்ச்சி இருபதாம் நூற்றுண்டின் தமிழின ஆராய்ச்சிப் படைப்புக்களுக்கெல்லாம் ஒரு சிகரம் வைத்தாற் போன்றது. அத்துறையில் புரட்சிகரமான ஒரு புதுத்திசை காட்டி திரும்பு முகமாயும் அமைந்துள்ளது. அதே சமயம் ஆராய்ச்சிகளில் எளிதில் காணமுடியாத தெளிவும் கவர்ச்சியும் ஏட்டின் நடையில் மிளிர்கின்றன. அதன் முதற்பக்கம், முதல் வரியில் கண்ணோட விடுபவர் கடைசிப் பக்கம், கடைசி வரி செல்லும் வரை கண்ணோட்டத்தையும் இடையே நிறுத்தமுடியாது. புனைகதைக்கேயுரிய இத்தகைய உயிரோட்டத்தை அவர் தம் ஆராய்ச்சிப் போக்குக்கு அளித்து, அதை மணமும் உயிர் வளர்ச்சியும் பெற்ற பொன்மலரோ என்னும்படி ஓர் அரும் படைப்பாக்கியுள்ளார்.

ஆசிரியர் புரட்சிகரமான புதுமைக் கருத்துக்களையும் சிந்தனை ஓட்டத்தையும் ஏட்டின் தலைப்பு மட்டுமன்றி, உள் தலைப்புக்களும் சுட்டிக்காட்ட உதவுகின்றன. "சிந்திக்கின்றான் தமிழன்!", 'இராவணன் யார்?', 'மூ நாடு எது?', 'முத்தொள்ளாயிரமா, மூத்தொள்ளாயிரமா', 'தொல்காப்பியர் பிறப்பகம்', 'தம்பரட்டா–தாமிரபரணி தேசம்!', 'கண்டறியாதன கண்டோம்!' ஆகியவை இவற்றுட் சில. கடைசித் தலைப்புச் சுட்டுகிறபடி, தமிழ் தமிழன், தமிழகம் பற்றிய பல புத்தம்புதிய, முன் எங்கும் எவரும் கண்டறியாத, கேட்டறியாத–ஆனால் முன் விளங்காத பலவற்றை விளங்கவைக்கிற–கருத்துக்களை இப்பகுதிகள் கொண்டுள்ளன. தமிழ்மொழி, தமிழினம், தமிழகம், தமிழகம்சூழ்ந்த அண்டை அயல் உறவினங்கள் ஆகியவை பற்றி இன்று நிலவும் பல அறியாமை மாயைகளை, பல தப்பெண்ணங்களை, பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் உலகில் உலவ விட்டுள்ள பல போலிக் கருத்துக்களின் கருந்திரைகளை இவ்வேடு நீக்க வழி வகுக்கின்றது.

பழமை ஆராய்ச்சிமரபு, இனமரபு, மொழிமரபு, இலக்கிய மேற்கோள், கல்வெட்டு மேற்கோள்கள் ஆகியவற்றின் உதவியால் ஆசிரியர் அவ்வாராய்ச்சி மூலங்களின்மீதே புத்தொளி காட்டும் திறம் வியத்தற்குரியது; அத்துடன் அவற்றால் அவர் அகற்ற விரும்பும் மாயையின் செறிவும் பெரிதேயாகும். இவற்றுள் தமிழகத்தின் வருங்கால வளத்துக்கு இன்றியமையாத தலைசிறந்த விளக்கம் இலங்கை, இலங்கையில் தமிழருடன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இணைந்து வாழ்ந்து வரும் சிங்கள மொழி இனம், சிங்களமொழி ஆகியவை பற்றியது.

தென்னகத்தில் பேசப்படும் மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவை பண்டைப் பெருந்தமிழ், அல்லது திராவிட இன மொழியின் கிளைகள், அல்லது வழி மொழிகள் என்பதும்; இந்தியத் துணைக் கண்டத்தில் அதாவது இன்றைய இந்தியா–பாகிஸ்தான் பரப்புக்களில் நிலவும் ஏனைய மொழிகள் ஆரிய இனம் எனச் சிலரால் குறிக்கப்படும் 'இந்தோ-ஐரோப்பிய' இன மொழிகள் என்பதும் இன்று பொதுவாக அறிவுலகம் அறிந்த செய்திகளே. ஆனால் நல்லாயர் கால்டுவெல் வகுத்துக் காட்டியுள்ளபடி, திராவிட இனம்சார்ந்த மொழிகள் இத்தென்னக மொழிகள் மட்டுமல்ல. அதற்கு வடக்கில் கோண்டு, கூயி, இராசமகால், பிராகுவி முதலிய மலை நாட்டவர் மொழிகளும் பண்படா நிலையிலுள்ள, அல்லது அந்நிலையடைந்துள்ள திராவிட மொழிகளேயாகும். அத்துடன் ஏனையவடதிசைத் தாய்மொழிகளும் 'வடமொழி' என்று இடைக்காலங்களிலிருந்து சிறப்பித்து அழைக்கப்படும் சமஸ்கிருதமும் அதன் முன்னோடிகளான பாகதங்கள், பாளி வேதமொழி ஆகியவையும்கூட, பேரளவில் ஆரிய மயமாக்கப்பட்டுவிட்ட அடிப்படைத் திராவிடக் கலவை மொழிகளே என்றும் பெரும்பாலான ஆராய்ச்சியாளர் சுட்டிக் காட்டியுள்ளனர். எனினும் ஆராய்ச்சி பொதுமக்களிடையே

ருக்கும் மேலீடாகவே விளங்காமற் போகாது. ஆனால் புத்தமதம் மூலமும் அம்மதத்தை அங்கே கொண்டு சென்ற விசயன் மூலமும் ஆரிய மொழியும் இனக்கலப்பும் சேர்ந்துள்ளன என்று ஆரியம் திறம்படப் பிரசாரம் செய்கிறது. ஆனால்,இதுவும் வரலாற்றுக்கு முரண்பட்ட வாதமே. புத்த மதம் மட்டுமல்ல, சமணமதமும் வடதிசைக்கே உரியவை. இலங்கையில் புத்தசமயம் மட்டுமே புகுந்துள்ளது. தமிழகத்திலும் கன்னட, மலையாள, தெலுங்குப் பகுதிகளிலும் நீண்ட காலம் புத்தசமயமும், அதன்பின் சமணசமயமும் பரந்து செறிவுற்று விளங்கின. இவ்விரண்டு சமயங்களின் செறிவாலும் அணிமையிலுள்ள தென்னகத்தில் ஏற்படாத ஆரியக் கலப்பும் பண்பும் கடல்கடந்த தொலைநிலமாகிய இலங்கையில் எவ்வாறு ஏற்பட்டிருக்க முடியும்? தவிர, விசயன் கதை பாண்டியரது மகாபாரத மரபுபோன்ற புராணக்காலக் கதையேயன்றி வேறன்று. அதை வரலாற்று மரபென்று கருத எத்தகைய சான்றுகளும் இல்லை. அக்கதை உண்மையானால்கூட, ஒரு அரசகுமாரன் வரவால் ஒரு நாடும் இனமும் மொழியும் முழுதும் அயலினச்சார்பாய்விட முடியாது. தவிர, முற்காலப் புத்தசமண சமயங்கள் மட்டுமன்றிப் பிற்காலக் கங்கை

இறங்கி வரும்போது பிரசார வடிவான ஆராய்ச்சியும் ஆராய்ச்சி வடிவான பிரசாரமும் ஆராய்ச்சி முடிவுகளைத் திரித்து, சமஸ்கிருதத்தை இந்தியாவின் மூல ஆரிய மொழியாகவும் வடதிசை மொழிகளை முற்றிலும் ஆரிய இனமொழிகளாக்வும் கருதும்படி செய்துவிடுகிறது. அத்துடன் தனித் திராவிடர் வாழும் தென்னகத்தில் மட்டுமன்றி, இந்தியத் துணைக் கண்டத்தின் வடபாகமெங்கும் உள்ள மக்கள் சிறப்பாகக் கங்கை வெளியிலுள்ள மக்கள் ஓரளவு ஆரியக் கலப்புடைய திராவிடரே என்பதும் முற்றிலும் மறைக்க, மறக்கடிக்கப்பட்டு வருகிறது. திராவிடம் என்பதே தாழ்ந்த வகுப்புக்குரிய சின்னம் என்று சாதியடைப்படையில் கருதப்பட்டுவரும் கருத்தேஇம்மாயைக்குப் பெரிதும் வழி செய்து தமிழுக்கெதிரான போலி ஆராய்ச்சிப் பிரசாரங்களை எங்கும் பரப்பி வருகிறது.

துணைக்கண்டத்தில் செய்யப்படும் இப்போலியாராய்ச்சிப் பிரசாரங்களைவிட வியப்புக்குரியவை, மெய்ந்நிலையை இன்னும் முனைப்பாகத் திரித்துக் காட்டுபவை–இலங்கை, சிங்கள மொழி, சிங்களவர் பற்றிய கருத்துக்கள். திராவிட மொழிகளின் எல்லை கடந்துசென்று, பின், அதற்கும் தெற்கேயுள்ள சிங்கள மொழியும் இனமும் தமிழினத்தை விடக் குறைந்த ஆரியத் தொடர்பே உடையதாயிருக்க முடியும் என்பது, வேண்டுமென்று கண்ணை மூடிக் கொள்பவருக்குத் தவிர, வேறு எவ

ஆரிய நாகரிகமும் பெரிதும் ஆரிய எதிர்ப்பாகவும் ஆரிய திராவிடக் கலப்புப் பண்பாகவுமே தோன்றின. அவை இன்றைய ஆரிய நாகரிகத் தளவு தமிழகத்து அயலான நாகரிகமாகமாட்டா!

வருங்காலத்தில் நல்லாயர் கால்டுவெல் போன்ற ஒரு ஒப்பியல் மொழி நூலாராய்ச்சியாளர் தாம் சிங்கள மொழி, மலாய்மொழி ஆகியவற்றின் இனத்தொடர்பை உள்ளவாறு விளக்கமுடியும். அவை ஆரிய இனத்தைவிடத் திராவிட இனத்துடனும் தமிழுடனுமே மிக நெருங்கிய தொடர்புடையவை என்பது அப்போது எளிதில் விளக்கப்படுவது உறுதி. ஆனால், அத்திசையில் ஆசிரியர் கணபதிப்பிள்ளையவர்களின் சான்றுகள் திசைகாட்டிகள் ஆகின்றன. சிங்களமொழியின் தொன்மையான பெயர் 'எழு' என்பதே இதை அவர் எடுத்து விளக்கி, நாட்டின் பழம் பெயர் 'ஏழ்' 'மூ' என்று பல ஆதாரங்களால் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் பழந்தமிழ்ப் பெயராகிய 'ஈழம்' என்பதும் சிங்களம் என்பதும் சிலோன் என்ற அதன் மேலைமரபுத் திரிபும் 'எழு' 'ஏழ்' ஆகியவற்றின் சிதைவுகளே என்று ஆசிரியர் விளக்கியுள்ளார். உண்மையில் 'தமிழ்' என்பதின் மூலப் பகுதியாகி 'இழ்' என்பதனுடனும் 'திராவிடம்' என்பதன் மூலப் பகுதிகளில் (திரை, இடம்) ஒன்றான 'இடம்' என்பதனுடனும்கூட அது தொடர்புடையதே யாகும்.

இச்சிற்றேடு திறம்பட அகற்றும் மற்றொரு போலிக் கருத்து இலங்கை தமிழகத்துக்கு வெளியேயுள்ள ஒரு பகுதி என்ற இன்றைய தவறான எண்ணமேயாகும். தமிழர் பலர் துணைக் கண்டப் பகுதியிலிருந்து இலங்கை சென்று அணிமைக்காலங்களிலும் பழங் காலங்களிலும் குடியேறியதுண்டு. ஆனால் அதுபோலவே இலங்கையிலிருந்தும் தமிழர் துணைக்கண்டப் பகுதியில் குடியேறியது உண்மை. துணைக் கண்டப் பகுதியிலுள்ள "ஈழவர்" என்ற மக்கள் வகுப்பினர் பெயரே இதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் இக்குடியேற்றங்கள் திருநெல்வேலியிலிருந்து தஞ்சைக்கும், தஞ்சையிலிருந்து திருநெல்வேலிக்கும் தமிழர் குடிமாறுவதுபோன்ற குடிபெயர்வேயன்றி வேறல்ல. அவை நாட்டின் எல்லைகடந்த குடியேற்றங்களல்ல, ஒரு நாட்டுக்குள்ளேயே நிகழ்ந்த குடிமாற்றங்கள் மட்டுமே. பண்டைய இலங்கை கடலால் பிரிக்கப்படப் பெறாத தமிழகத்தின் ஒரு பகுதியேயாகும். உண்மையில் தமிழரின்மூலத் தாயகப்பகுதி என்ற பெயருக்குத் துணைக்கண்டப் பகுதியைவிட மிகப் பழமை வாய்ந்த உரிமையுடையது இலங்கையேயாகும், இதையும் ஆசிரியர் தக்க பல ஆதாரங்களால் வலியுறுத்திக் காட்டுகிறார். 'மூவர்' என்பதன் மரபுப்பொருள் மூன்று அரசரல்ல, 'மூ' என்ற நாட்டவர்என்பதையும்; 'மூவுலகு,' 'ஏழுலகு' என்ற தொடர்கள் பிற்கால ஆரிய மரபால் மூன்று உலகம், ஏழு உலகம் என்று தவறாகக்கொள்ளப்பட்டனவேயன்றி, உண்மையில் 'மூ' நாட்டவர் கண்ட உலகம், 'ஏழ்' நாட்டவர் கண்ட உலகம் என்றபொருளுடையவையே என்பதையும் ஆசிரியர் வாதிட்டு நிலைநாட்ட முற்பட்டுள்ளார். இவை மேலும் ஆய்ந்து காண்டற்குரிய புரட்சிகரமான புதுமைகளே என்பதில் ஐயமில்லை.

'இராவணன்' பெயரின் பொருள், அவன் 'தென்னவன்' அதாவது பாண்டியர் மரபினன் என்ற கருத்து, இலங்கையின் பழம் பெயர்களாகிய 'தம்பரட்டா, தாமிரபரணி ஆகியவற்றின் விளக்கங்கள், 'யாழ்ப்பாணம்' என்ற பெயர் விளக்கம், தொல்காப்பியர் மூலத்தாயகப்பகுதி எது, என்பதுபற்றிய விளக்கம், ஆகியவை புதுமை ஆராய்ச்சிகள்; ஆராய்ச்சியாளருக்கே புதுச்சுவையும் புதுத் தூண்டுதலும் தரத்தக்கவை ஆகும்.

ஆசிரியர் காட்டிய ஆராய்ச்சி மேற்கோள்களில் சில எம் நூல்களிலிருந்தும் திரட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவை எமக்குப் புது வலிமையல்ல, புதுத் தூண்டுதலே தருபவை. உண்மையில் அவர் அடிச்சுவடு பின்பற்றும் வருங்கால ஆராய்ச்சிகளால் அவர் ஆராய்ச்சி முடிபுகள் மேன்மேலும் வலியுறவு பெறத் தக்கவையே என்பதில் எமக்கு ஐயமில்லை. தொல்காப்பியர் மூலப்பிறப்பகம் சுட்டிக்காட்டும் சான்றுகள் பலவற்றை அவர் தந்து, அது இலங்கை சார்ந்த பகுதியென்று நாட்டியுள்ளார். ஆனால் இதனை மேலும் வலியுறுத்தும் சான்றுகள் பலவற்றை வருங்கால ஆராய்ச்சிகள் எளிதில் காணமுடியும். உரையாசிரியர் கொற்கைநாட்டு வழக்கு என்று சுட்டிக்காட்டிய 'பெண்மகன்' (சிறுமி) தொல்காப்பியரே ஆளும்

— 10ம் பக்கம் —

மாலையிட்ட மணவாளன் திருப்பாதந் தன்னை
மறக்காமல் தொழுதுஎழும் பிறைசுமந்த மங்கை
சேலையிலே பின்னலிடும் நூல்களைப்போல்
வாழ்வின்
சிக்கலிலே அகப்பட்டுத் தவிக்கின்ருள், கரும்பை
ஆலையிலே பிழியுங்கால் வடிகின்ற நீர்போல்
ஆரணங்கின் கண்களிலே நீரருவி வடியும்
காலையிலே புனல்வடிக்கும் அல்லிமலர் போலே
காலமெலாம் கண்ணீரில் நீந்திக்கொண்
டிருப்பாள்.

எரிவிளக்கின் ஒளிபோன்ற அமைதியான
தோற்றம்
எண்ணத்தில் ஆழ்ந்திருக்கும் சிந்தனையின்
வடிவம்
சிரிக்கின்ற மலர்கண்டும், துள்ளிவிளை யாடும்
சிறுகுழந்தை எழில்கண்டும் மகிழாத மங்கை
விரிக்காத மலர்போல முகம்குவித்த வண்ணம்
''விதி''யென்று தலைமீது கைவைத்துக் கொண்டு
அரிக்கின்ற புழுப்போல உள்ளத்தில் ஏதோ
அரிப்பதனுல் வேதனையில் ஆழ்ந்திருப்பாள்
என்றும்.

காலத்தின் விளைவாலே கணவனை இழந்து
கவலையெனும் அலைகளினுல் அலைக்கழிக்கப் பட்டு
மேலெழுந்து படருங்கால் கொம்பொடிந்து போன
மாதவிபோல் துணையற்று மனம்வருந்தி நிற்கும்
சேலைநிகர் விழிமங்கை இந்நாட்டில் வாழும்
சாத்திரத்தின் கொடுமையினுல் உருவான
சிலையே
சாலையிலே மிதிபட்டு அழிகின்ற மலர்போல்
தையலவள் வெறுத்தொதுக்கப் படுகின்ருள்
இங்கு.

கருநாகப் பாம்பைப்போல் சடைபின்னிக்
கொண்டு
களிகொண்ட மயில்போல நடைபோட்ட
வண்ணம்
கருவண்டு இசைபாடும் பூஞ்சோலை செல்லல்
கதையாகப் போயிற்று; கற்பனையில் கூட
கருவண்டு விழிமங்கை இனிஅந்தச் சுகத்தைக்
கரத்தாலும் புலனறிவின் துணையாலும் தொடுதல்
அருஞ்சுரத்தில் குளம்தோண்டிப் புனலூறச்
செய்யும்
அரும்பணிக்கு ஒப்பாகும் அட்டியிலை சிறிதும்.

அன்றொருநாள் கருங்குவளைக் கண்ணழகி
கணவன்
அணிமார்பைத் தொட்டணைத்து ஆனந்தம்
கொண்டாள்
கன்றுமுகம் தாய்கண்டு களிகொள்வ தைப்போல்
கட்டழகி மணவாளன் திருவுருவைக் கண்டு
என்றுமிலாக் களிகொண்டு இல்வாழ்வில் தம்மை
எவராலும் பிரிக்கமுடி யாதென்று நினைத்தாள்
அன்றலர்ந்த மலர்வாடி விழுவதைப்போல்
அவளின்
அருந்துணைவன் தனிமையிலே அவளைவிட்டுச்
சென்ருன்.

இந்தியில் ''நிராலா'' எழுதிய கவிதை
யின் மொழிபெயர்ப்பு.

அவள்மட்டும் தனியாக வாழவில்லை; கண்ணீர்
அருவியினைச் சுமந்தவண்ணம் உயிர்தரித்தி
ருந்தாள்
துவளாத கொடியென்று வருணிக்கப் பட்ட
தோகையவள் சருகைப்போல் தரைமீது
கிடந்தாள்
பவளயிதழ் மலர்த்தேனை அருந்தியபின் வண்டின்
பட்டிறகு நனைவதைப்போல் பெண்ணணங்கின்
நெஞ்சக்
கவலைதனை அறிந்தோரின் கண்ணிமைகள் நீரால்
கறைபட்டு நனைந்துவிடும் கண்ணீரும் பெருகும்.

பனையோலை யால்வேய்ந்த சிறுகுடிலில் அமர்ந்து
பாய்ந்துவரும் கண்ணீரின் துணைகொண்டு
அவளும்
நினைவென்னும் திரைமீது பழநாளில் வாழ்ந்த
நிலைதன்னை வரைகின்ருள் நெஞ்சம்மாள் கின்ருள்
தனைவிட்டுப் பிரிந்திட்ட மணவாளன் தாளைத்
தடங்கண்முன் காண்கின்ருள் தலைவணங்கு
கின்ருள்
தனைக்கொல்லும் சமுதாய அமைப்பினை நினைந்து
சிற்ருய்க் கண்ணீரை உகுக்கின்ருள் தோகை.

துறையூர் ந. அலி

கலையிழந்த கன்னங்கள் குழிவிழுந்த கண்கள்
காய்ந்துபோன இதழோரம் மாய்ந்துவிட்ட
செம்மை
அலையலையாய்ப் புரளுங்கார்க் கூந்தலினைக்
கோதி
அலங்காரம் செய்யாத ஆரணங்கு இன்று
மலையருவி போல்கண்ணீர் பெருக்குகிருள்
அவளின்
மனவருத்தம் கண்டெவரும் வருந்துவது இல்லை
அலைமோதும் சிற்ருறும் அசைகின்ற காற்றும்
ஆரணங்கின் துன்பத்தில் பங்குகொள்ள முந்தும்.

தேறுதல்யார் தருவார்கள்? தேம்பியழுங்
கண்ணீர்த்
திவலைகளை யார்துடைப்பார்? துன்பத்தைப்
போக்கி
மாறுதலைத் தரவல்ல மனவுறுதி கொண்டோர்
வையத்தில் இதுவரையில் பிறப்பெடுக்க
விலையோ?
நீறுபூத்த நெருப்பைப்போல் இருக்கின்ருள்,
வெற்று
நீறென்று கருதாதீர்; சிறுகாற்றுப் பட்டால்
ஊறுவிளைக் கும்நெருப்பாய் மாறிடுவாள் பின்னர்
ஊரழியும் காடழியும் உலகமெலாம் அழியும்.

கடலுக்கு அணையில்லை, காற்றுக்குத் தடையும்
குவலயத்தில் இதுவரையில் ஏற்படவும் இல்லை
மடநங்கைத் துயருக்கு முடிவேதும் இல்லை
வையத்தைப் புரப்பவனும் அவள்பக்கம் இல்லை
கடவுளுக்கு வேலையெலாம் கண்ணீரைத்
துடைக்கும்
கனிவான வேலையலால் வேறென்று மில்லை
இடர்நீக்க இதுவரையில் வாராத கடவுள்
எங்கிருக்கின் ருரென்று யாவருமே கேட்பர்.

புகழோடு நாம்வாழ்ந்த பெருநாடு என்று
போற்ருதார் எவருமிலை ஆகையினுல் இன்று
சுகவாழ்வில் பங்கேற்க முடியாத விதவைத்
துயர்களைதல் முதற்கடமை எனக்கருத வேண்டும்;
அகத்தினிலே ஒருவண்டி மாசுவைத்துக்
கொண்டு
அகிலத்தில் நம்பெயரைப் பறைசாற்றிக்
கொள்ளல்
நகைக்கிடமாம்! அதனுலே நம்நாட்டின் புகழும்
நிச்சயமாய் அழுகிப்போய் மண்மூடிப் போகும்!

விரைவில்!

இவர்தான்

எம். ஜி. ஆர்.

ராஜம் - மணாளன்

எழுதுகிருர்.

முன்கதைச் சுருக்கம் :

நாலு வேலி நிலம்; சொந்தமாக ஒரு வீடு, இதுதான் பெரியசாமியின் பரம்பரைச் சொத்து. இதை வைத்துத்தான் ஒரு வம்பு தும்புக்கு போகாமல் மாத்தூர் கிராமத்தில் மனைவி சிவகாமியோடு சிக்கனமாக வாழ்ந்து வந்தார் பெரியசாமி.

மாத்தூர் உயர்நிலைப் பள்ளியில் பத்தாவது வகுப்பை முடித்துவிட்ட மகன் ஞானசம்பந்தனை கல்லூரியில் பட்டப் படிப்பு படிக்க வைத்து, திண்ணைப் பள்ளிக்கூடத்து அரிச்சுவடியைத் தவிர வேறு படிப்பையறியாத மாத்தூர் மக்களிடையே ஞானசம்பந்தனை பட்டதாரியாகக் காண ஆசைப்பட்ட பெரியசாமி கஷ்டப்பட்டு அவனை கல்லூரியில் சேர்த்து வைத்தார். மாதா மாதம் கல்லூரிச் சம்பளப் பணமும் ஞானசம்பந்தன் சொந்த செலவுக்கென்று தனியாகப் பணமும் அனுப்பி வந்தார்.

ஞானசம்பந்தனோ கல்லூரி நண்பன் ஏகாம்பரத்துடன் படிப்பை மறந்து பட்டணத்தை சுற்றி வந்தான்.

பெரியசாமி தன் மகன் ஒழுங்காக படித்து வருகிறான் என்ற நம்பிக்கையோடு அனுப்பி வரும் பணம் அத்தனையும் சிகரெட்டு புகையாக மாறிக்கொண்டிருந்தன.

விடுமுறை நாட்களில் தவறாது வீடு வந்து செல்லும் ஞானசம்பந்தன் சில மாதங்களாக வீட்டை மறந்திருந்தது கண்டு சிவகாமியம்மாள் என்னமோ ஏதோ என்று பதறினாள். அதற்கு தோதாக ஒரு நாள் தினத்தாளில் வந்த செய்தியொன்று சிவகாமியம்மாளின் பதட்டத்தை அதிகப்படுத்தியது.

கல்லூரி மாணவரின் பரிதாப மரணம்.

தன் தோழர்களுடன் இன்பப் பயணம் சென்ற கல்லூரி மாணவனொருவன் எண்ணூர் என்னும் இடத்தில் கடலில் மூழ்கி மாண்ட பரிதாபம்.

பெற்ற மனமல்லவா, இறந்தது யாரென்று தெரியாமலே துடித்தது.

ஞானசம்பந்தனின் நிலை என்னவென்று அறிந்து வர பெரியசாமியை சென்னைக்கு அனுப்பி வைத்தாள் சிவகாமியம்மாள்.

பெரியசாமி கல்லூரிக்கு வந்து தன் மகனைக் கண்ட பிறகுதான் அவருக்கிருந்த குழப்பம் தீர்ந்தது. ஆனால் ஞானசம்பந்தனின் தோற்றம் அவருக்கு மன வேதனையைத் தந்தது. நோயுற்றவன்போல் மெலிந்து காணப்பட்டான். அறை முழுவதும் காலிச் சிகரெட்டு டப்பாக்களும் துண்டு சிகரெட்டுகளும் சிதறிக் கிடந்தன. இவைகளைக் காண பெரியசாமிக்கு அருவருப்பாகவும் ஞானசம்பந்தனின் நடவடிக்கைகளில் சந்தேகமும் ஏற்பட்டது.

ஞானசம்பந்தனுக்கு மறைமுகமாக புத்திமதிகள் கூறிவிட்டு மாத்தூருக்கு திரும்பினார் பெரியசாமி.

அடுத்த வாரமே ஞானசம்பந்தனிடமிருந்து, பணம் அனுப்பும்படி கடிதம் வந்தது. கல்லூரிச் சம்பளம் கட்டவேண்டும், இல்லையேல் தேர்வு எழுதமுடியாது, உடனடியாக ஐம்பது ரூபாய் அனுப்பி வையுங்கள் என்று எழுதியிருந்தான்.

மழை இல்லை. விளைச்சல் இல்லை. கையிலிருந்த பணமும் தீர்ந்துவிட்டது. பெரியசாமி அங்கே இங்கே ஓடினார் எப்படியாவது அனுப்பிவிட வேண்டுமென்று ஒரு வாரமாக கஷ்டப்பட்டார், கிடைக்கவில்லை. இதற்குள் ஞானசம்பந்தனே நேரில் வந்து சேர்ந்தான். அவனைப் பார்க்கும்பொழுது பெரியசாமிக்கு ஆத்திரமாக வந்தது. அடிக்கடி பணம் கேட்டு நச்சரிக்கிறானே என்பது மட்டுமல்ல காரணம் வாலிபமிழந்து வெளிறிப் போன முகத்தையும் நோயாளிபோல் இருக்கும் அவனையும் பார்க்கும்பொழுது அவருக்கு கல்லூரி அறையில் கண்ட சிகரெட்டு துண்டுகளே நினைவுக்கு வந்தன.

ஒரு வழியாக ஞானசம்பந்தனுக்கு பணத்தைக் கொடுத்து, தேர்வு நன்றாக எழுதும்படி கூறி அனுப்பி வைத்தார் பெரியசாமி.

தேர்வு முடிந்து ஞானசம்பந்தன் மாத்தூருக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கையில்தான் ஏகாம்பரம் அவனை ஒய்யாரவிலாசுக்கு அழைத்துச் சென்று பல பெண்களைக் காட்டி ஞானசம்பந்தனின் மனதை பழைய நிலைக்கு திருப்ப முயன்றான். ஞானசம்பந்தனோ குழப்பமடைந்தவனாய் வா விடுதிக்குப் போகலாம் என்று ஏகாம்பரத்தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஒய்யார விலாஸைவிட்டு வெளியேறினான்.

வெளியேறினானே தவிர வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. ஒய்யாரவிலாஸ் மாடி அறையைக் கண்டு நடுங்கி ஓடிவந்த ஞானசம்பந்தன் இரண்டொரு நாட்களில் தானே அதைத் தேடிக்கொண்டு போனான். அவனை வரவேற்க அங்கு பலர் காத்துக் கிடந்தனர். ஒய்யார விலாஸ் நாவிற்கு மட்டும் சுவைதரும் ஹோட்டலாக இல்லை. உடலுக்கும் உணர்ச்சிக்கும் அங்கு உணவு கிடைத்தன.

மனிதன் சந்தர்ப்பத்திற்காக, வேண்டாத சில காரியங்களை வலியச் செய்கிறபொழுது அது வாழ்க்கையில் நிரந்தரமாக ஒட்டிக்கொண்டால் அவன் அதிலிருந்து மீள முடிவதில்லை. ஞானசம்பந்தனும் சந்தர்ப்பத்திற்காகத்தான் அமுதவல்லியை போலீசார் முன்னிலையில் தன் மனைவி என்று ஒப்புக்கொண்டான்.

எங்கோ இருந்தவள், ஊர்பேர் தெரியாதவள், யாருக்கோ உரிமையானவள் ஒய்யார விலாசுக்கு உடலை விற்க வந்தவள், ஞானசம்பந்தனுக்கு மனைவியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அமுதவல்லி ஞானசம்பந்தனுக்கு ஒரு புதிராக விளங்கினாள். ஒய்யார விலாசுக்கு வந்தாளே தவிர வெள்ளிக்காசுகளையும் வேளைக்கொருவரையும் அவள் விரும்பவில்லை.

முறையோடு வாழ்க்கைக்கு ஒரு கோடு வகுத்துக்கொண்டு வாழ விரும்பினாள். அந்தக் கோட்டைத் தாண்டிப் போகும்படி தன்னை துன்புறுத்தும் தன் சொந்த மாமன் அருணாசலத்தைப் பற்றி ஞானசம்பந்தனிடம் கதை கதையாகச் சொன்னாள். என்னைப் பலருக்கு வியாபாரப் பொருளாக்கி அதன் மூலம் வரும் வருமானத்தில் அவன் வாழ விரும்புகிறான். அதை நாகரிகமாக நடத்தத்தான் ஒய்யார விலாசுக்கு அழைத்துவந்தான். தனியறையில் ஆண்களைச் சந்திப்பதே இதுதான் முதல்தடவை; உங்களை நம்புகிறேன் என்னைக் காப்பாற்றுங்கள் என்று ஞானசம்பந்தனின் கால்களில் விழுந்தாள் அமுதவல்லி.

அமுதவல்லியின் அழகு முகமும் களங்கமில்லாத குழந்தை உள்ளமும் ஞானசம்பந்தன் உள்ளத்தில் இரக்க உணர்ச்சியை ஏற்படுத்தியது. "காப்பாற்றுகிறேன் என்றான்" தனி வீடு அமர்த்தினான். குடும்பம் நடத்தத் தொடங்கினான். அருணாசலமும் அமுதவல்லிக்கு நிரந்தரமாக ஒரு கல்லூரி மாணவன் கிடைத்துவிட்டான் இனி பலரிடம் பல்லைக் காட்டி பேரம் பேசும் தொல்லைவிட்டது என்ற மகிழ்ச்சியில் தனக்கு பணம் தேவைப்படும் பொழுதெல்லாம் ஞானசம்பந்தனிடமிருந்து கறந்துகொண்டிருந்தான். அவனும் அமுதவல்லிக்காக கொடுத்துக்கொண்டிருந்தான்.

ஞானசம்பந்தன் ஒழுங்காகப் படித்துக்கொண்டிருக்கிறான் என்ற மகிழ்ச்சி பெரியசாமிக்கு. அதனால்தான் "பணம் தேவை" என்று அவன் கடிதம் எழுதுகிற பொழுதெல்லாம் ஏன் எதற்கு என்று கேட்காமல் அதிகமான தொகையாக இருந்தாலும் கடன் பட்டாவது அனுப்பிவந்தார்.

காலாகாலத்தில் ஞானசம்பந்தனுக்கு திருமணம் செய்து மகனையும், மருமகளையும் கண்ணால் பார்க்க வேண்டுமென்ற ஆசை சிவகாமி அம்மாளுக்கு. அதற்கு அவன் சம்மதத்தைப் பெற ஒரு முறை மாத்தூருக்கு வந்து போகும்படி ஞானசம்பந்தனுக்கு கடிதம் எழுதினார்கள்.

அமுதவல்லி ஆடிப்பாடும் சின்னப் பெண்ணாக இருந்து சிலை வடிவம் பெற்று, ஞானசம்பந்தனுடன் சிரித்து மகிழ்ந்து மங்கை ஆனபின் மசக்கை நோயும் உற்றாள்.

வயிற்றின் பாரம் அமுதவல்லிக்கு மிகுந்தது. அருணாசலத்தின் அரிப்பும் ஞானசம்பந்தனுக்கு வளர்ந்தது. கல்லூரியின் விடுமுறையும் நெருங்கியது. மாத்தூருக்கு வந்து போகும்படி பெரியசாமியிடமிருந்து அழைப்பு வந்துகொண்டேயிருந்தது.

ஞானசம்பந்தனின் உள்ளத்தில் அழியாத சித்திரமானாள் அமுதவல்லி. அவன் விரும்பிய சுவையெல்லாம் அவளிடமிருந்து தடையில்லாமல் கிடைத்தது. இந்த சுவையான வாழ்க்கையை மறந்து ஒரு மாதம் மாத்தூரில் போய் தங்க வேண்டுமே என்ற கவலை அவனை வருத்தியது.

உடனே புறப்பட்டு வரும்படி மாத்தூரிலிருந்து கடிதம் வரவே, அமுதவல்லியிடம் விரைவில் திரும்பிவிடுவதாக கூறி அவள் கண்ணீரைத் துடைத்து அவளை சமாதானப்படுத்திவிட்டு மாத்தூருக்குப் பயணமானான் ஞானசம்பந்தன்.

மலைவையாவூரில் ஒரு நிலக்கிழார் வீட்டில் பெண் பார்த்திருப்பதாகவும் அவர்களும் சம்மதம் தந்துவிட்டதாகவும் பெண் நல்ல அழகியென்றும், நாளை பெண் வீட்டார் மாப்பிள்ளையைப் பார்க்க வருகிறார்கள் என்றும் பெரியசாமியும் சிவகாமி அம்மாளும் போட்டிபோட்டுக்கொண்டு ஞானசம்பந்தனிடம் சொல்லிக்கொண்டிருந்தனர்.

ஞானசம்பந்தனுக்கு ஒரே திகைப்பாக இருந்தது. என்ன சொல்வது என்று புரியாமல் தடுமாறினான்.

மறுநாள் பெண் வீட்டார் வந்தார்கள். மாப்பிள்ளையை பிடித்திருந்தது. அவர்களுக்கு சம்மதம் தெரிவித்தார்கள். பலர் முன்னிலையில் வெற்றிலை பாக்கு மாற்றிக்கொண்டார்கள்.

ஞானசம்பந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது. மேலும் இங்கிருந்தால் புதிய குழப்பங்கள் உண்டாகலாம், ஆகையால் உடனே சென்னைக்கு புறப்படுவது என்று முடிவு கட்டினான். எப்படியோ பெரியசாமியையும், சிவகாமி அம்மாளையும் சமாதானப்படுத்திவிட்டு சென்னை திரும்பினான்.

அமுதவல்லியோ ஒரு அழகான ஆண் குழந்தையை கையில் ஏந்தியபடியே பார்த்தீர்களா உங்கள் மகனை என்று ஞானசம்பந்தனை வரவேற்றாள்.

மகனைப் பார்த்து சிரித்து மகிழ வேண்டிய ஞானசம்பந்தன் அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு சிந்தனை செய்தபடியே நடந்துகொண்டிருந்தான். அமுதவல்லியை பார்க்கும்பொழுது அவனுக்கு பரிதாபமாக இருந்தது. மறுநாள் வருவதாக அமுதவல்லியிடம் கூறிவிட்டு கல்லூரி சேர்ந்தான்.

கல்லூரியில் அன்று தமிழாசிரியர் பழங்கால தமிழர் திருமணம்பற்றி நீண்ட அழகான விளக்கம் தந்து தமிழ் வகுப்பை முடித்தார். ஞானசம்பந்தனின் சிந்தனையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. உடனே பெரியசாமிக்கு கடிதம் எழுதினான். தன் திருமணம் நடைபெறுவதாய் இருந்தால் புரோகிதர் கூடாது என்று எழுதியனுப்பினான்.

புரோகிதர் வந்தால் பையனோ திருமணம் வேண்டாம் என்கிறான். புரோகிதர் இல்லாமல் திருமணம் என்றால் அவருக்கோ ஒன்றும் விளங்கவில்லை. இதற்கோர் யோசனை கேட்க தன் பால்ய நண்பர் மணிவண்ணன் இல்லத்தை நாடிச் சென்றார்.

ஞானசம்பந்தன் அமுதவல்லியின் வீட்டில் நிம்மதியாகப் படுத்திருந்தான். திடீரென அங்கு வந்த அருணாசலம் அவசரமாக ஐநூறு தேவையென்றான். ஞானசம்பந்தன் திகைத்தான். தரவில்லையென்றால் தனக்குப் பெரிய ஆபத்து என்றான் அருணாசலம். ஒரு வாரத்தில் தருவதாக அவனிடம் கூறிவிட்டு கல்லூரி விடுதிக்கு வந்தான். விடுதியின் அருகில் வரும்போதே தன் அறைக்கெதிரே இரண்டு மூன்று பேர் நிற்பதைக் கண்டான்.

அத்திப்பழம்

மா. கி. தசரதன், எம்.ஏ.

கதை அடுத்த இதழில் தொடரும்.

★

அசையழுத்தம்

திராவிட மொழிகளில் 'அசையழுத்தம்' காரணமாகப்பொருள் வேறுபடுகின்றது என சிலர் கூறுகின்றனர். அசையழுத்தம் என்ருல் ஒரு சொல்லின் முதலசையிலோ, பிற அசையிலோ உச்சரிக்கையில் அழுத்தி ஒலித்தலால் பொருள் வேறுபாடு அடைதல் ஆகும். இப்பண்பு சிறக்கப்பெற்ற சில மொழிகளைக் காணலாம். ஆங்கில மொழியில் "Contract" என்ற சொல் காணப்படுகின்றது. இந்த ஒரே சொல்லில் o, a என்ற இரண்டு உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றுள் 'o'வை அழுத்தி உச்சரித்தால் வினைச் சொல்லாகவும், 'a'யை அழுத்தி உச்சரித்தால் பெயர்ச் சொல்லாகவும் பொருள் படுகின்றது.

Contract—சுருங்குதல்.—வினைச் சொல்.

I entered into a contract—பெயர்ச் சொல்.

ஆங்கிலத்தில் எங்கெல்லாம் உயிர் ஒலி வருகின்றதோ அவையெல்லாம் ஒவ்வொரு அசையாக மதிப்பர்.

Pal-pi-ta-tion

ஆனுல் தமிழிலோ அசையழுத்தம் என்ருல் உயிர் எழுத்தை அழுத்தி ஒலித்தல் இல்லை; ஒரு சொல்லின் ஒரு கூற்றினை அழுத்தி ஒலிக்கிருேம் என்று பொருள்.

சீன மொழியில் அசையழுத்தம் காரணமாகப் பொருள் வேறுபடுதல் உண்டு. காரணம் சீனமொழி ஓரசை மொழியாகும்.

lao என்ருல் 'உன் தந்தையைப் பாதுகாப்பாயாக'

lao lao என்ருல் 'பெரியவரைப் பெரியவர்போல் நடத்துக.'

சீனமொழியில் ஒரு சொல்லே மேலும் கீழும் அழுத்தி உச்சரிப்பதால் இருபது வேறுபட்ட பொருள்களைக் குறித்தல் உண்டு. இதனை 'குரல் ஒலிமொழி' (Tone Language) என்பர். ஆனுல் தமிழ் குரல் ஒலிமொழி அன்று.

ஆயினும் தொல்காப்பியர் காலத்தில் இந்த அசை எழுத்துக்கள் போலச் சில உண்டு எனலாம். மேலே கண்ட ஆங்கிலம், சீனம் போன்ற மொழிகளிலுள்ள அளவு இல்லை என்ருலும் தமிழர்கள் அசையழுத்தத்தை அறிந்திருந்தமை புலனுகின்றது.

"உப்பகாரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும்
பொருட்டாகும்மே"

—என்று தொல்காப்பியரது எழுத்ததிகாரம் (76) கூறுகின்றது.

தபு-நீ சாவு (தன்வினை
தபு-சாகச்செய் (பிறவினை)

மேலே கண்ட இந்த அளவு மட்டுமே தமிழில் அசையழுத்தம் இருந்தது என்பது உண்மை.

ஆனுல் தொல்காப்பியரது புணரியலில் காணப்படுகின்ற 141, 142 ஆம் சூத்திரங்களும் இந்த அசை அழுத்தத்தை, ஒலி அழுத்தத்தை விளக்குகின்றன என்று அறிஞர் கூறுதல் பொருந்துவதா? என்பதே ஐயப்பாடு.

"எழுத்தோரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே"—(141)

"அவைதாம்,
முன்னப் பொருள் புணர்ச்சி வாயின்
இன்ன வென்னும்
எழுத்துக்கடன் இலவே"—(142)

இவற்றிற்கு நச்சினுர்க்கு இனியவர் உரையில் காணப்படும் உரையை மட்டும் கொண்டு திராவிட மொழிகளில் • அசை அழுத்தம் கூறப்பட்டது என்று கூறுதல் பொருந்தாது.

இவையெல்லாம் உண்மையில் அசையெழுத்துக்கள் தாமா? எனச் சிந்திக்க வேண்டும். 'அசையழுத்தம்' அல்லது 'ஒலி அழுத்தம்' என்று கூறப்படும் பண்பு ஓரெழுத்து ஒருமொழி, ஒரே சொல்லில் இருத்தல் சிறப்பாகும். நச்சினுர்க்கினியர் தமது உரையில்

"செம்பொன்பதின்தொடி"
"குன்ருேராமா"

போன்ற தொடர்மொழிச் சொற்களைக் காட்டுகின்ருர். மேலும் இங்கு அசையழுத்தம் காரணமாகவா பொருள் வேறுபடுகிறது என்ருல், அல்ல. சொற்களைச் சந்தி முதலியன பிரித்து விளங்குமாப்போல ஒலித்தமையால் பொருள் வேறுபடுகின்றது. சந்தி பிரித்துக் கூறுதலால் பொருள் வேறுபடுதலாவது—

செம்பொன் பதின் தொடி
செம்பு ஒன்பதின் தொடி.

—என்று பொருள் வேறுபடுதலேயாம். எழுத்துக்கள் ஒன்றுக்கொன்று இசைகின்றபொழுது சிறிது, சிறிது பொருள் வேறுபடுகிறது. என்று கொண்டு இதனை ஒலியழுத்தம் காரணமாகப் பொருள் வேறுபடுகின்றது என்பது பொருந்துவதோ? என்பதே ஐயப்பாடு.

வடமொழியில் அசையழுத்தத்திற்கு நல்ல மதிப்பு உண்டு.

வடமொழி	தமிழ்	ஆங்கிலம்
உதாத்தம்	எடுத்தல்	Rising tone
ஸ்வரிதம்	படுத்தல்	Level tone
அநுதாத்தம்	நலிதல்	Falling tone

ஒரே ஒலியை மிக உயர்த்திச் சொன்னுல் அது உதாத்தம்; அதே ஒலியை மிகத் தாழ்த்திச் சொன்னுல் அது அநுதாத்தம்; அதே ஒலியை நடுவு நிலையில் சொன்னுல் அது ஸ்வரிதம் என்பர்.

வடமொழியில் காணப்படும் இந்தப் பண்பு தமிழில் இல்லாதிருந்தும்கூட, நச்சினுர்க்கு இனியவர் போன்ருேர் அத்தகு பண்பு தமிழில் உள்ளது என்ருல் தமிழுக்குத் தனிச் சிறப்பு என்று கொண்டு, அசையழுத்தம் தமிழில் அதிகம் உள்ளது என்று வலிந்து பொருள் கூறிவிட்டார். தொல்காப்பியர் காலத்தே "தபு" போன்று ஓரோர் இடத்தில் காணப்படுகின்றது 'அசையழுத்தம்' என்பது. அன்றி நச்சினுர்க்கினியர் போன்ற வடமொழிப் புலமை மிக்கோர் வடமொழியை உயர்ந்த மொழி என்றும், வடமொழி அறிந்தோரே அறிவு மேம்பட்டவர் என்றும் கொண்டு தமிழ்மொழியில் "அசையழுத்தம்" என்ற பண்பு மிக்குக் காணப்படுவதாக மிகைப்படுத்திக் கூறிவிட்டார் என்பதே பொருந்தும்.

— **அரிமழும், கதிரவன்**

விற்பனையாகிறது!

அண்ணு

ஆசிரியர் :
டி. என். இராவணன்

தி. மு. க. சார்புடைய
வார இதழ்.

திருத்தம்

19-4-58ம் தேதிய இதழில் வெளியான திருப்புத்தூர் தோழர் கா. காத்தமுத்து அவர்களின் திருமணச் செய்தியில், 'நகர **முன்னுள்** செயலாளர்' என்றிருப்பதை, நகரச் செயலாளர் என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

தென்னுற்காடு மாவட்ட

தி. மு. கழக மாநாடு

தென்னுற்காடு மாவட்ட தி. மு. க. 3-வது மாநாடு ஜூன் 7, 8, சனி, ஞாயிறு நாட்களில் **விருத்தாசலத்தில்** திரு. K. K. நீலமேகம் திறந்து வைக்க, மதுரை திரு. S. முத்து அவர்கள் தலைமையில் சிறப்புற நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அறிஞர் **அண்ணு**, பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் மற்றுமுள்ள தலைவர்களும் வருகை தர இருக்கிருர்கள். மாநாட்டிற்கான முன் ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மாநாடு வெற்றிகரமாகவும், சகல வசதியுடன் சிறப்புடன் நடைபெற நிறையப் பொருள் தேவைப்படுகிறது. இதற்கு நன்கொடை வசூல் செய்ய தோழர்கள் A. கோவிந்தசாமி M.L.A., M. செல்வராஜ் M.L.A., C. முனுசாமி, C. நடராஜன் M.L.A., M. ஆனந்தன் M.L.A., G. சொக்கலிங்கம் ஆகியோர், வசூல் செய்துகொண்டு வருகிருர்கள்.

கிளைக்கழக செயலாளர்களும், மாநிலப்பிரதிநிதிகளும் ஒவ்வொருவரும் ரூ. 5 கொடுத்து மாநாட்டின் பிரதிநிதிகளாக பதிவு செய்து கொள்ள வேண்டுகிருேம்.

ரூ. 25/- கொடுப்பவர்கள் வரவேற்புக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

சுற்றுப்பிரயாணத்தின்போது கிளைக்கழக செயலாளர்களும், மாநிலப் பிரதிநிதிகளும் அந்தந்த வட்டத்தில் சந்தித்து அவர்களுக்குரிய கட்டணத்தைச் செலுத்துவதுடன், பெருவாரியான நன்கொடை வசூல் செய்து கொடுக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிருேம்.

இதில், வசூல் குழு தோழர்களும், மற்றுமுள்ள கழக தோழர்களும் பெரிதும் ஆர்வத்துடன் ஒத்துழைக்க வேண்டுகிருேம்.

ஒவ்வொரு கிளைக்கழகமும், கழகம் இல்லாத ஊர்களில் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் அவரவர்கள் ஊர்களிலும் மாநாட்டின் விளம்பரத்தை தட்டிகளிலும் சுவர்களிலும் எழுதிவைக்கவேண்டுகிருேம். குறிப்பாக நகரங்களில் ஒவ்வொரு முக்கியமான இடங்களிலும் நல்ல முறையில் விளம்பரம் செய்ய வேண்டுகிருேம்.

சினிமா சிலைடு, சுவரொட்டிகள், துண்டு விளம்பரங்கள் விரைவில் அனுப்பப்படும்.

தொண்டர் படையில் சேர்ந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள் 15-5-58க்குள் தொண்டர்படை தலைவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

மாநாடு சிறப்பாக நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுகிருேம்.

வரவேற்புக்குழுத் தலைவர் :
A. **கோவிந்தசாமி** M.L.A.

பொருளாளர் :
M. **செல்வராஜ்** M.L.A.

செயலாளர்கள் :
C. **முனுசாமி**
G. **சொக்கலிங்கம்**
C. **நடராஜன்** M.L.A.
M. **ஆனந்தன்** M.L.A.

இது தசாவதாரக் கட்சி!



★

கடந்த 18 ஆண்டுகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எத்தனை முறை தனது கொள்கைகளை சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு மாற்றியிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தும் இந்தக் கட்டுரை.

★

ஒரு அரசியல் கட்சியின் வளர்ச்சி அதன் நிலையான அடிப்படைக் கொள்கைகளின்மீது மக்களுக்கு உள்ள ஒரு நீங்காத பாசத்தின் மூலம் வெளிப்படுகிறது. கொள்கை காரணமாகத்தான் கட்சி வளருமே தவிர தலைவர்கள் ஆற்றல் திறமை முதலியவைகள் இரண்டாவது இடத்தைத்தான் பெறமுடியும். நாட்டிலே தி. மு. கழகத்திற்கு செல்வாக்கு பெருகி வருவதற்கு காரணம் அதன் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து கழகம் அன்றிலிருந்து இன்றுவரை சிறிதும் நழுவிச் செல்லாததே! எனவே மக்கள் மன்றத்தில் நமக்கு ஒரு மகத்தான வரவேற்பு இருக்கிறது. சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு கொள்கைகளை மாற்றுவது அவர்களுக்கே தங்கள் கொள்கைமீது நம்பிக்கை இல்லை என்பதை தெளிவுறுத்தும். தவறை திருத்திக்கொள்வது வரவேற்கக்கூடியதே. ஆனால் சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு கொள்கைகளை மாற்றிக்கொண்டு நிலைமைக்கு தக்கவாறு வேடம் போடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் தொழிலுக்கு ஒப்பாகும். இத்தகைய ஒரு போக்கு அக்கட்சியின் அழிவு காலத்திற்கு அதை நடத்திச் செல்லும். கடந்த 18 ஆண்டுகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எத்தனை முறை தன் கொள்கைகளை மாற்றியிருக்கிறது என்பதை கவனிப்போம்.

★ 1939-ம் ஆண்டு உலக மகா யுத்தம் ஆரம்பித்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸுடன் சேர்ந்துகொண்டு பிரிட்டனுக்கு எதிராக வேலை செய்தது. நாஸிசத்தை ஒழித்துவிட்டு பிறகு பிரிட்டன் சர்வாதிகாரத்தை முறியடிக்கலாம் என்ற யோசனையை நிராகரித்துவிட்டு, பிரிட்டனை எதிர்த்து வேலை செய்தார்கள். அப்பொழுது காம்ரேட் M. N. ராய் ரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் சமாதான ஒப்பந்தம் ஒன்று இருந்தாலும் ரஷ்யாவை ஜெர்மனி விரைவில் தாக்கும் என்று கம்யூனிஸ்ட்களுக்கு கூறினார். ஆகவே கண்டிப்பாக ரஷ்யா அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் முதலிய நேச நாடுகளின் பக்கம் சேர்ந்து ஜெர்மனிக்கு எதிராக போரில் இறங்கும் என்றும் கூறினார். இதைக் கேட்டு அப்போதைய கம்யூனிஸ்ட்டுகள் கிண்டலும் கேலியும் புரிந்தனர். ஆனால் வெகு விரைவில் காம்ரேட் ராய் கூறியது போலவே ரஷ்யா பிரிட்டனுடன் சேர்ந்து ஜெர்மனியை தாக்க ஆரம்பித்தது. உடனே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், பிரிட்டன் மக்களின் நல்வாழ்விற்காக போராடுகிறது, ஆகவே இந்திய மக்களே பிரிட்டனுக்கு உதவி புரியுங்கள் என்று அறைகூவல் விடுத்தது மட்டுமல்லாமல் பிரிட்டனிமிருந்து ரகசியமாக பண உதவியும் பெற்றுக் கொண்டது.

★ குருஷேவ், புல்கானின் ஆகிய இருவரும் இந்தியா வருவதற்கு முன்பு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸை பலமாக எதிர்த்து வந்தது. அவர்கள் வருகைக்கு பின்பு நேரு அரசாங்கத்தை கம்யூனிஸ்ட் கட்சி வானளாவப் புகழ்ந்ததை மக்கள் அறிவர்.

★ 1952-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின்போது நமது மாநிலத்தில், பெரியார் ராமசாமி அவர்களின் ஆதரவைப் பெற்று கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சில இடங்களை பிடித்தது. தேர்தல் சமயத்தில் அவர்கள் தந்தை பெரியாரை 'திராவிட நாட்டின் தந்தை' என்றெல்லாம் வர்ணித்தனர். ஆனால் தேர்தல் முடிந்தவுடன் பெரியாரின் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றவுடன் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு எதிராக கூச்சல் போட ஆரம்பித்தனர்.

★ சோவியத் நாடு—புதிய கலைக் களஞ்சியம் 18-வது வால்யூமில் இஸ்லாம் மதத்தைப்பற்றி கீழ் கண்டவாறு எழுதியிருக்கிறது.

"இஸ்லாம் மற்ற மதங்களை போலவே ஆத்மீகத் துறையில் பாட்டாளிகளை ஒடுக்க சுரண்டும் வர்க்கம் உபயோகிக்கும்பிற்போக்கு நோக்கு கொண்டதாகவே இருக்கிறது." இந்து மதத்தைவிட பன்மடங்கு சிறந்த முஸ்லீம் மதத்தையே சோவியத் நாடு பிற்போக்கு என்கிறது. அப்படியானால் இந்து மதத்தைப்பற்றி...... அப்பேர்பட்ட இந்து மதத்தை இங்கு உள்ள காம்ரேடுகள் போற்றிப் புகழ்கிறார்கள் ஏன்? மக்கள் ஆதரவை பெறுவதற்காக.

★ 1936 டிசம்பர் 5-ல் உள்ள ஸ்டாலின் திட்டத்தின் The 'constitution also guarantees the right to engage freely in anti-religious propaganda" என்று மத எதிர்ப்பு பிரசாரத்திற்கு அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் பெரியார் ராமசாமி மத எதிர்ப்புப் பிரசாரத்தில் இறங்கினால் அதை எதிர்த்து மதத்திற்கு வக்காலத்து வாங்குகிறார்கள் இங்கு உள்ள கம்யூனிஸ்ட்கள். அது ஏன்?

★ ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அரசாங்கத்தின் பிடிப்பிலிருந்து பிரிந்து சுதந்திரமாக வாழும் உரிமையை வழங்கியிருக்கிறது சோவியத் அரசாங்கம் என்பது 1936-ம் ஆண்டு உண்டாக்கப் பட்ட ஸ்டாலின் அரசியல்அமைப்பு திட்டத்தின்மூலம் (Article 17) தெளிவாகிறது. அதேபோல்பிரிந்து போகும் உரிமை மாநிலத்திற்கு வழங்கப்பட வேண்டும், அதற்கான திருத்தம் அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டுமென நாம் கூறும்போது காம்ரேடுகள் ஏன் எதிர்க்கிறார்கள்?

★ ரஜனி பால்னி டட் என்ற பழம் பெரு கம்யூனிஸ்ட் வாதி 1946-ம் ஆண்டு, தான் எழுதிய புத்தகத்திலே மாநிலத்துக்கு பிரிந்து போகும் உரிமை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கும்பொழுது, அத்தகை-உரிமை வழங்கப்படக்கூடாது என கம்யூனிஸ்டுகள் கூறுவது ஏன்?

★ 13-6-54 ஜனசக்தியில் சோவியத் யூனியனில் உள்ள உக்ரெயின், ஜார்ஜியா, உஸ்பெக்கிஸ்தான் போல பல தேசிய இனப் பகுதிகள் சேர்ந்து வாழ்வதுமூலம் அந்நியப் படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வசதி இருக்கிறது என்று எழுதப்பட்டிருக்கிறதே அப்படியானால் கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் தெள்ளு தமிழும் கூட்டாட்சி முறைப்படி அரசாங்கம் அமைக்கப் பட வேண்டும் என்று நாம் கூறும் பொழுது அவர்கள் ஏன் மறுக்கிறார்கள்? திராவிட எல்லைக்குள்ளே விந்தியத்திற்கு தெற்கே கூட்டாட்சி வேண்டுமென்று நாம் சொல்வதை அவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள்?

★ அமிர்தஸரசில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் அமைதியான சாத்வீக முறையில் சோஷியலிஸ சமுதாயம் அமைக்கப் பாடுபடுவதுதான் கட்சியின் குறிக்கோள் என அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால் தங்கள் அடிப்படை கொள்கைகளான,

1. பலாத்காரத்தின் மூலம்புரட்சி நடத்துவது.
2. எதிர்கட்சிகள் இல்லாமல் செய்வது.
3. தனி மனிதனின்சுதந்திரத்தை பறிப்பது.
4. கம்யூனிஸ்ட் அமைப்பிற்கு பாடுபடுவது போன்ற மூலாதாரக் கொள்கைகளை கைவிட்டுவிட்டார்களா அல்லது சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு கொள்கைகளை மாற்றுகிறார்களா என்பது பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

★ 'நியுயார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு கொடுத்துள்ள பேட்டில் மதிப்பிற்குரிய கேரள முதலமைச்சர் திரு நம்பூதிரிபாட் அவர்கள் Force has not been abandoned unconditionally but it had been dropped under present conditions..."என்று கூறியிருக்கிறாரே அப்படியானால் அமிர்தஸரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நிரந்தரமான மாற்றங்கள் அல்ல என்றல்லவா புலனாகின்றது.

ஆகவே இந்த மாற்றம் மக்களை ஏமாற்றுவதற்கு வகுக்கப்பட்ட ஒரு வழி. சந்தர்ப்பம் சூழ்நிலை தோன்றும் பொழுது தங்களது பழைய பலாத்காரக் கொள்கைகளுக்கு அவர்கள் திரும்பிவிடுவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெரிகின்றது. கம்யூனிஸ்ட் கட்சியின் இத்தகைய ஒரு போக்கு அவர்களின் வீழ்ச்சிக்கு வழி வகுக்குமே தவிர, வளர்ச்சிக்கு பயன்படாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கொள்கையை நினைத்த நேரம் மாற்றிக்கொண்டு சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு வேடம் போடுவது அரசியல் உலகில் நேர்மையாக்க கருதப்பட மாட்டாது என்பதை எடுத்துக் காட்டி, கொள்கை உறுதி உள்ள தி. மு. கழகத்திடம் வீணாக மோதாதீர்கள் என்று எச்சரிக்கிறோம்.

—ஜோசப் பெஸ்கி, பி. ஏ.

வெண்பாப் போட்டி-17.

ஈற்றடி :

கலைகடந்து தோன்றுதே கால்.

முடிவு தேதி 17-5-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

விடமாட்டேன். பயப்படாதே! வாரம் ஒருமுறை நான் வருகிறேன். பெண்ணைப் பற்றி நீ சந்தேகப்பட வேண்டாம். இராவணேசுவரனுக்கு ஒரு பெண் இருந்தால் எப்படியோ அப்படிப் பட்டவள் குஞ்சரம். உன் மகளுக்கும் அவள் துணையாக இருப்பாள். ஆனால் ஒன்று, இரவு நேரங்களைத் தவிர பிற வேளைகளில் அவள் வெளி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.''—என்று வேண்டுகோள்களை அடுக்கிக் கொண்டே போனார் ஜமீன்தார்.

நடக்க முடியாத காரியங்கள் கண்ணெதிரே நடக்கும்போது, நாவல் படிப்பதுபோல் மனதுக்குப் படுவதுண்டு. அந்த நிலை அய்யாக்கண்ணுக்கும் வந்தது.

குஞ்சரம் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு அம்பலகாரரின் மகள். அவருடைய மகளை ஒரு ஜமீன்தார், அதுவும் சிங்கப்பெருமாளின் நண்பர்களில் ஒருவர் கவர்ந்து வருவது என்றால், அந்தக் காலத்தில் இது சாமான்யமான காரியமல்ல. அய்யாக்கண்ணுக்கு மனதிலே பயமிருந்தாலும் இதற்குள்ளே புதையுண்டு கிடக்கும் கதையைத் தெரிந்துகொள்ளத் துடித்தார்.

''குஞ்சரம் உங்கள் கைக்கு எப்படி வந்தது?''

''பிரான்மலைக் குகையிலிருந்து கடத்திவரச் செய்தேன்.''

''ஏன்?''

''அது பெருங்கதை அய்யாக்கண்ணு!''

''சுருங்கச் சொன்னால் புரிந்து கொள்கிறேன்.''

''மான்கொம்பு என்று கேள்விப் பட்டிருக்கிறாயா?''

''ஆமாம், சமீபத்திலே கொலை செய்து போட்டார்களே! அவர் தானே!''

''ஆமாம் அவர்தான்! ஊரிலே பேசிக்கொள்வதெல்லாம் உண்மை என்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய்! அப்படித்தானே! மான்கொம்பைக் கொல்லவுமில்லை, வெல்லவுமில்லை. அவன் இருக்கிறான் முண்டம் மாதிரி!''—சிரித்துக்கொண்டே ஜமீன்தார் சொன்னார்.

அய்யாக்கண்ணுக்கு உலகில் எதன்மீது நம்பிக்கை வைப்பதென்று புரியவில்லை. ஜமீன்தார் சொல்லும் ஒவ்வொரு சம்பவமும் திடுக்கிடக் கூடியதாக இருந்தது.

''என்ன இப்படிச் சொல்கிறீர்கள். நாங்களெல்லாம் இந்த உலகத்திலே தான் இருக்கிறோமா இல்லை, அழிந்து போய்விட்டோமா?''

''பெரிய இடத்துக்காரியங்களெல்லாம் இப்படித்தானே நடக்கும். ஏழை ஜனங்கள்தான் தம்பட்டம் அடிப்பாங்க. மானம் போகும். சில வேளைகளிலே குடும்பமே அழியும்.''

''சரி சொல்லுங்கள் சிங்கப்பெருமாளுக்கும் மான்கொம்புக்குமெழுந்த தகராறிலே எவனோ குஞ்சரத்தைக் கடத்திக்கொண்டு போய் பிரான்மலைக் குகையிலே போட்டுவிட்டான். நான் அவனுக்குத் தெரியாமல் அந்தப் பெண்ணை இங்கே கடத்தி வந்திருக்கிறேன். மான்கொம்பு இந்தப் பெண்ணைத் தேடி அலைகிறான். அவன் கண்ணுக்கு இந்தப் பெண்பட்டால் ஆபத்து. அந்த முரடன் தீர்த்துக் கட்டிவிடுவான். அவன் பழிகாரன். காட்டுப்பன்றி!''

''நாம் ஏன் இந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு திரிய வேண்டும். அம்பலகாரரிடம் ஒப்படைத்துவிட்டால் என்ன?''

''அவசரப்படுகிறாய்! சிங்கப்பெருமாள் அம்பலகாரரால் வெள்ளைக்காரர்களிடமிருந்து பல அனுகூலங்களைப் பெற வேண்டியிருக்கிறது. அதற்கெல்லாம் இதுதான் சரியான நேரம். என்ன புரிகிறதா? மறந்து விடாதே! நீ இரண்டு காரியங்களை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மான்கொம்பு உயிரோடு இருப்பது தெரியக்கூடாது; அம்பலகாரருக்குத் தெரிந்தால் படை சேர்ப்பார். குஞ்சரம் பகல் நேரங்களில் வெளியில் வரக்கூடாது. இந்தப் பராமரிப்புச் செலவுக்காக ஐநூறு ரூபாய் வைத்துக்கொள். போகப் போக இன்னும் தருகிறேன்'' என்றார் ஜமீன்.

அய்யாக்கண்ணு நடுங்கிக்கொண்டே ரூபாய் முடிச்சை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் போகத் திரும்பினார். வாசலிலே விளக்கும் கையுமாக நின்ற அமிர்தத்திடம் அதுவரை நடந்தவைகளையெல்லாம் ஆதியோடு அந்தமாகச் சொல்லிமுடிக்க அய்யாக்கண்ணுக்கு ஒரு நாழிகை பிடித்தது.

கதவைச் சாத்தினார். பூட்டினார். பூட்டை ஒரு முறைக்குப் பலமுறை இழுத்துப் பார்த்துக்கொண்டார்.

மறுநாள் காலை அய்யாக்கண்ணு நேரம் கழித்து எழுந்தார். வழக்கமாக அதிகாலையில் எழுந்து நாயனம் வாசிக்கும் பழக்கம் கடந்த சில நாட்களாக அவரிடம் காணப்படவில்லை.

சூரியன், அவன் பயணத்தில் கால் பகுதித் தூரத்தைக் கடந்துவிட்டான். வாசற் கதவை யாரோ தட்டினார்கள். அலறித் துடித்துக்கொண்டு கதவைத் திறந்தார் அய்யாக்கண்ணு. ஒரு கிழவர், ஒரு அம்மையார் இருவரும் வாசலில் நின்றனர். அவர்கள் கையில் தேங்காய் பழத் தட்டு இருந்தது.

- தொடரும் -

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

வழக்காகும். இன்றைய கொற்கைப் பகுதியில் இவ்வழக்கு இல்லை. 'பெண் பசங்கள்' என்ற பேச்சு வழக்குத் தான் சென்னைப் பகுதியில் உண்டு. ஆகவே, அது இலங்கையுடனிணைந்த பண்டைக் கொற்கை நிலம்சார்ந்த வழக்கு என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியர் இலக்கணம் நாட்டுப் பேச்சு வழக்குகளைத் திசை வழக்குகளாக (திசைச்சொற்களாக) மட்டுமே சுட்டிக்காட்டிற்று. தொல்காப்பியம் உண்மையில் பெரிதும் செந்தமிழுக்கே சிறப்பு முறையில் இலக்கணம் ஆகும். ஆகவே, தொல்காப்பியர் சொல்லாட்சியை அவர் பிறப்பக ஆட்சி என்று கருதுவதை விட, அவர் காலச் செந்தமிழ் அதாவது, இலக்கியத் தமிழ் ஆட்சி என்று கொள்வதே சால்பு. இலக்கிய வழக்கு அரசியல் தலைமையிடச் சார்பு மிக்கது. அதே வழக்குகள் மலையாள நாட்டிலும் சென்னைப் பகுதியிலும் பிற இடங்களிலும் இன்று ஓரளவு வழங்குவதன் காரணத்தையும் இதுவே விளக்கும். இலக்கிய வழக்குத் தலைமையிடத்தை சிறப்பாகக் கொள்ளினும், பொதுமையும் உடையது. அதே சமயம் அது பழமையும் பேணுவது. தொல்காப்பிய வழக்கு இலங்கையில் சிறப்பாகவும் மற்ற இடங்களில் பொதுவாகவும் அமைந்துள்ள நிலை இதை முழுதும் மெய்ப்பிக்கிறது. ஏனெனில், இலங்கைப் பகுதி தொல்காப்பியர் பிறப்பகம் மட்டுமல்ல, முதலிடைச் சங்ககாலத் தலைநகர்களுக்கும் அணிமையுடையது ஆகும்.

தொல்காப்பியர் வழக்குக்கும் மலையாள நாட்டுக்கும் உள்ள தொடர்புக்குத் தொல்காப்பியர் வாழ்க்கைத் தொடர்பே ஒரு விளக்கம் தரும். அவர் ஆசிரியரான அதங்கோட்டாசான் ஊர்தான் திருவாங்கூர், அல்லது திருவிதாங்கூரின் பெயர்க் காரணமான அதன் பழந்தலைநகராகிய அதங்கோடு. அது இன்று மலையாள நாட்டிலில்லாவிட்டாலும் அதை அடுத்த குமரிப்பகுதியிலேயே உள்ளது. அதங்கோட்டாசான் என்ற குடிமரபுப் பெயரும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்ந்து இன்றளவும் மரபறாது அவ்வூரில் நிலவுகின்றது.

இடைக்கால உரையாசிரியர் மரபு கடந்து தமிழ்மொழியின் உயிர் மரபுகளை நுனித்துணரும் ஆசிரியர் நுண்ணறிவு பாராட்டுதற்குரியது. இதற்கு ஒரு சான்று கூறலாம்; ''பொருள் தெரியாத சொற்களையும், பொருள் குன்றிய சொற்களையும், தவறாகப் பிரிக்கப்பட்ட சொற்களையும் அசை நிலைகள் என இலக்கண நூலாசிரியர்கள் எடுத்தோதினர் என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது!'' இலக்கிய ஆராய்ச்சியில் இது புரட்சி உண்டுபண்ணத்தக்கதாகும். ''யாழ'' என்பதை ஆசிரியர் அசையன்று, தோழர் என்னும் பொருளுடையது என்று கொள்கின்றார். அது சரியென்பதை அனுபவமே காட்டும். அதே பொருளுடைய ஏடன், ஏடி, எல்லா என்னும் சொற்களை இன்று பொருளிழந்தே தொனிப் பொருள் மட்டும் காட்டி வழங்குவது காணலாம். இதுபோலவே, ''மன்'' அசையென்று கொள்ளப்பட்டாலும், ''எல்லாரும் அறிந்த உண்மையாயிற்றே, காண்!'' என்ற (ஆங்கில உரியிடைச் சொல் 'Indeed' போன்ற) பொருள் தருவது காணலாம். வள்ளுவர் குறளில் ''யாதானும் நாடாமால், ஊராமால்'' என்ற அழகிய தொடரில் ''ஆல்'' அசை என்று கூறும் உரையாசிரியர்கள் நிலை பரிதாபத்துக்குரியது. அதுவும் (இதுவன்றோ மெய், இது தெரியாதா?) என்ற குறிப்புப் பொருள் உடையது. ''செயற்பால தோரு மறனே யொருவற்-குயற்பால தோரும் பழி'' என்னும் குறட்பாவிலும் ''ஓர், உம்'' அசை என்று கொள்ளப்படுதல் தமிழ்ச் சுவைகாணார் இழுக்கமாம். ''தோறும்'' என்ற இன்றைய பேச்சு வழக்குடன் அது தொடர்புடையது. ''செய்வதற்குரியது ஒவ்வொன்றையும் நீ புகுந்து பார்த்தால், அது யாவும் அறமாகத்தான் இருக்கும்'' என்பதே வள்ளுவர் குறித்த பொருள் ஆகும்.

ஆசிரியர் ஏடு இதுபோன்ற பல நல்ல தமிழின ஆராய்ச்சிகளுக்கு ஒரு சீரிய வழிகாட்டி ஆகும். இனியேனும் தமிழ், தமிழின, தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சிகள் துணைக்கண்டத் தமிழகத்துடன் நின்றுவிடாமல், பண்டைத் தமிழகப் பகுதியான இலங்கையிலும் அதே வகைத் தொடர்பும் வரலாற்று, நாகரிக இன உறவுகளும் மிக்க மலாய், தென் கிழக்காசியா, பர்மா, வங்கம், திபெத், சீனம், தென் ஆபிரிக்கா, அமெரிக்கா நடுநிலக்கடலகம் முதலிய பகுதிகளிலும் சென்று பரவ வேண்டுவது அவசியம். மறுமலர்ச்சியூழி அத்தகைய ஆராய்ச்சிகளில் புகுந்து பரவி ஓங்க ஆசிரியர் ஏடு பெரிதும் உதவுமாக! உருவில் சிறிதாயினும் பயனிற் பெரிதாகிய இத்தமிழ்க் கருத்துப் பேழையைத் தமிழர் வரவேற்று அதன் மரபை வளர்ப்பார்களாக!

நூல்:—

''தமிழன் எங்கே?''

ஆசிரியர்: மு. கணபதிப் பிள்ளை

விலை ரூ. 1-25

கிடைக்குமிடம்:—

தமிழ்ச்சங்க இல்லம்,
57-ம் ஒழுங்கை,
கொழும்பு-6.

★

விற்பனையாளர் தேவை

திராவிட மக்களின் கூட்டுறவிற்காக போராடும் தமிழ் வார ஏடு

கன்னட நாடு

ஆசிரியர்: இராமன்

விபரங்களுக்கு:
கன்னட நாடு,
காட்டன்பேட், பெங்களூர் - 2.

★
எங்கும் கிடைக்கும்.

வெண்பாப் போட்டி

16. எழுவாய் எழுவாய் இனி.

தெண்டிரைசூழ் தென்னுட்டைத் தேய்த்துத்தூள் தூளாக்கி
உண்டிரையாய்க் கொள்வடவர் உய்வதுவோ ?—கண்டு
கழுவாய் கடிதியற்றிக் காலொடிக்க, கூவி
எழுவாய் எழுவாய் இனி.

—செங்கீரன், அக்கநாயக்கன்பாளையம்.

❁

பொன்னூர் தமிழ்விட்டுப் பொல்லா வடமொழியில்
கன்னுபின் னுவென்றே கத்துகிறுர்—தென்னு !
பழுதாகத் தூங்கின் பயனில்லை கண்டாய்
எழுவாய் எழுவாய் இனி.

—செல்வம், சென்னை-1.

❁

உற்றுர் உறவினர் ஊருளோர் காணுமுன்
கற்றுழைக் காடடைந்து காத்திருப்பாய்—பெற்றோர்
அழுகைக்கே அஞ்சிட்டால் ஆகுமோநம் காதல்
எழுவாய் எழுவாய் இனி.

—அமுதன், சென்னை-2.

❁

சீர்வாழ் தமிழன்னை சிங்களம், இந்தியால்
நீர்வீழ் விழியாளுள் நீபாராய்—மார்பில்
விழுப்புண் பொறித்தோர் வழித்தமிழா பொங்கி
எழுவாய் எழுவாய் இனி.

—அல்லி, கடையநல்லூர்.

❁

மீசையுள ஆண்களெலாம் வீடுகளில் பேடிகளாய்
ஓசையின்றித் தூங்குவதால், உன்னுட்டின்—மாசை
ஒழிக்க,நீ யாகிலும் ஒண்டொடியே ! போருக்(கு)
எழுவாய் எழுவாய் இனி.

—மிஸ்ஸஸ். விக்டர்ரமேஷ் (நர்ஸ்] திருமணி.

❁

தேனுய் இனித்தாலும் தீண்டாதீ ரென்னையென
மானுய் மறைந்தோடித் தாளிட்டாய்—வீணுய்
பொழுதும் புலர்ந்ததடி பூவையே ! தாள்நீக்(க)
எழுவாய் எழுவாய் இனி.

—எழிலன், நெய்வேலி.

❁

சாதிப்பேய் சாட சமயப்பேய் அச்சுறுத்த
சூதினராம் நச்சரவு தொல்லைதர—நீதி
வழுவாமல் வேறிடத்தில் வாழ்ந்திடுவோம்; அன்பே !
எழுவாய் எழுவாய் இனி.

—சவ்வாது, மீனுட்சிபுரம்.

❁

வீட்டைப் பெருக்கி, வெளியெல்லாம் கோலமிட்டு,
சூட்டோடு சோறுகறி சாம்பார்—போட்டுத்
தொழுவாய் மருமகளே ! சற்றேகண் தூங்கி
எழுவாய் எழுவாய் இனி.

—திராவிடப்பித்தன், கருப்பட்டிபாளையம்.

❁

வாடும் குடும்பத்தின் வாட்டத்தைப் போக்கிடவே
ஓடி அலைந்தே ஒருவேலை—தேடப்
பொழுதும் விடியாதோ போக? ஒளியே
எழுவாய் எழுவாய் இனி.

—வள்ளிமணுளன். மதகுபட்டி.

செந்தமிழும் வாழாதோ ? சீரிளமைத் தாய்நாடு
சொந்தமதாய் ஆகாதோ ? ஈழத்துள்—நொந்தார்
செழுநிலையைச் சேர்வாரோ? நேர்காணத் தாவி
எழுவாய் எழுவாய் இனி.

—செல்வன், சேலம்.

❁

தஞ்சமென்று சொல்லித் தமிழகத்தில் வந்தஇந்தி
வஞ்சத்தால் வண்டமிழை வாட்டுவதேன் ?—நெஞ்சே
பழுதற்ற பைந்தமிழின் பண்பினைக் காக்க
எழுவாய் எழுவாய் இனி.

—கோ. எழிலரசன், பூமலையான்குடிக்காடு.

❁

பிழையொன்றும் செய்தறியேன் பேதையென் மேனி
இழைசிரிக்க இன்னலுற்றேன் தோழி—கொழுநன்
வழிபார்த்த வேதனையைச் சொல்லியழைத் தேக
எழுவாய் எழுவாய் இனி.

ந. கண்மணி, செய்துங்கநல்லூர்.

❁

நாட்டை விடுவிக்க நம்தமிழைக் காப்பாற்ற
வீட்டில் நலம்பெருக்க வேற்றுரின்—மாட்டே
விழுவாய் விழுவாய்நீ வெம்போரி லேனும்
எழுவாய் எழுவாய் இனி.

—தாமரைக்கண்ணன், சோழபுரம்.

❁

நெஞ்சிற் கமுதாம் நற்றமிழ்; தென்னகமே !
நஞ்சிற் கிணையாய் நலியுதே;—அஞ்சுதற்குப்
பொழுதேது ஏற்றுவோம் பொலிவோடு தமிழாட்சி;
எழுவாய் எழுவாய் இனி.

—ஆ. மெ. இராசன், திண்டுக்கல்.

❁

எல்லைத் தகராறு ! என்றுமுள செந்தமிழ்ச்
சொல்லிற் கிடையூறு ! துன்பமிவை—வெல்ல
முழக்கமிடின் பேரெதிர்ப்பு ! பைந்தமிழா பொங்கி
எழுவாய் எழுவாய் இனி.

—அரங்கநெடுமாறன், வல்லம்.

❁

சிங்கத் தமிழ்மகனே சீரோடு வாழ்ந்தவனே
தங்கத் தமிழின்றே தாழ்ந்ததடா—பங்கமுற்று
அழுது புலம்புமுன் அவலநிலை நீக்க
எழுவாய் எழுவாய் இனி.

—புனிதன், பழனி.

❁

சேயுயிரை மீட்டளிக்குஞ் செய்யதமி ழுக்குநிகர்
மாயவிந்தி என்னும் மடமொழியோ—ஆயின்
அழுவா ரறியா துரைத்தார்; தமிழா
எழுவாய் எழுவாய் இனி.

வி. கே. சுப்பிரமணியன், பினுங்கு.

❁

எங்கோ இருக்கின்ற இன்மொழியின் எண்ணத்தால்
இங்குருகிப் பாழாகும் என்னெஞ்சே !—தங்கப்
பொழுதெல்லாம் சாய்நீராய்ப் போகுமுன் னேக
எழுவாய் எழுவாய் இனி.

—திருமணி, சென்னை.

முல்லை
- சிறப்பு மலர் -
எங்கும் விற்பனையாகிறது !

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு